# பொங்கினாள் மீனாட்சி

## கவிதைத் தொகுப்பு



ஆலையூரன் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கினாள் மீனாச்சி

## கவிதைத் தொகுப்பு

ஆலையூரன் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பொங்கினாள் மீனாச்சி |
| நூலின வகை | : | கவிதைத் தொகுப்பு |
| ஆசிரியர் | : | க.தங்கராசா (ஆலையூரன்) |
| உரிமை | : | திருமதி. வ. தங்கராசா |
| முதற்பதிப்பு | : | 02- 11-2009 |
| அட்டைப்படம் | : | ச.அ.அருள்பாஸ்கரன். |
| வெளியீடு | : | அருள் வெளியீட்டகம்<br>37 / 7, மத்திய வீதி, உவர்மலை -<br>திருகோணமலை. |
| தொ.பே.இல | : | 026-2221507. |
| பதிப்பகம் | : | ஜெயா பதிப்பகம் |
| கிடைக்குமிடம் | : | லங்கா புத்தகசாலை.<br>14.1,டயஸ் பிளேஸ். குணசிங்கபுரம்.<br>கொழும்பு-12. |
| தொ.பே. இல | : | 011- 2341942 |

ISBN : 955 – 99552 – 1- 7

விலை : ரூபாய் 200 /=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என்னை
ஊனாய் உயிராய்
உளமேற்று
'ஆனா' கற்க வைத்த – என்
அன்னாய்
என் தெய்வமே
நானென் செய்தேன்..?
பெற்ற கடனுக்காய்க் கூட
பெரிதாய் ஒன்றும் செய்தறியேன்
இது.. இச்சிறு நூல் இதுகூட
உன்னால் ஆனது தாயே..
அதனால்...
உன்னால் ஆன இந்நூலை
உனக்கே சமர்ப்பணம் செய்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

1. ஆலை அம் கேணி தந்த
    ஆலை(யின்) ஊரன்! கொண்ட
வேலைகள் பலவற் றோடும்
    வெண்தாளின் பாடற் காய்த்தான்.
கோலையும் கொண்டதால் யாம்
    கொஞ்சு செந்தமிழால் ஆன
நாலையும் காணுகின்றோம்
    நல்விலக் கியத்தின்பேரால்.

2. இலக்கியம் காலம் காட்டி
    இன்கவி இலக்கின் மூப்பு!
கலக்கலாம் கவியால் நெஞ்சை
    காட்டலாம் காட்சிக் கோலம்
நலக்குறை வானோர் கூட
    நாற்கவி கற்பா ரானால்
விலக்குவார் துயரம், கொள்வார்
    வீரத்தைக் காதலோடே

3. மலையகம் காண்ப தோடு
வன்னிமா நிலமும் கண்டு
அலைந் தலைந்தோடா நிற்கும்
அல்லல் எம்மாந்தர் கண்டு
நிலை குலையாமல் என்றும்
நீடிக்கும் வாழ்வாம் விடு
தலையையும் ஆலை யூரன்
தரக்கவி தரக் காண்போமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. திருப்பாவை திருவெம் பாவை
சீரிய தமிழ்த் தைப்பாவை
உருகிட வைத்தாற் போன்று
உயர்தமிழ் அள்ளித் தந்த
தருகவி யனைத்தும் தொட்டால்
தட்டவே செய்யும் தாளை
வரமுதற் கவிநூல் மேலும்
வருகென வாழ்த்தும் நாவே.

5. பூங்காற்றின் தூதும், என்றும்
பொன்றாத தமிழும் யாதும்
தீங்கிலா மானி டத்தின்
சிறப்பான விடிவும், தீமைக்(கு)
ஏங்காத துணிவும், நாளை…
எடுத்துச் சொல்கெனவும், சோர்ந்து
தூங்காத துடிப்பும் எல்லாம்
சொல்லுமோர் கவிப்பூ மாலை

6. "நூல் வேண்டாம் கணனிக் காலம்
நொடிகூடப் பொழுதிங் கில்லை
பால்வேண்டாம் பதநீர் போதும்
பண்வேண்டாம் பாட்டே போதும்
கோல் தாளேன் குரலே போதும்
கூட ஏன்? கொஞ்சம் போதும்
நால் கவி யேன்?என்பார்க்கும்
நல் விடை இதிலே உண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பொங்க மீனாச்சி வந்தாள்
பொங்கிட விட்டால் தானே?
பொங்கினாள் என்ன பொங்கல்
புரட்டினால் காண லாகும்
இங்கதைப் போலே உண்டாம்
எத்தனையோ கூத்துக்கள்
இங்கிதில் ஆறா றுண்டேல்
எதிலுமோர் பொருள் உண்டாமே.

8. ஆசிரிந் தோனாய், நல்ல
அதிபனாய்த், தரிசிப் போனாய்
மாசிலாப் பணிப்பாள் வோனாய்
மறந்திடாத் தொண்டாள் வோனாய்ப்
பேசியும், எழுதியும் நம்
பொருந்தமிழ் பரப்பும் ஊரன்
தூசெனத் துயரைத் தாண்டித்
தொடர்கவே தமிழின் தொண்டே!

கவிஞர். " தாமரைத்தீவான்"
ஈச்சந்தீவு – கிண்ணியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என் உள்ளத்தில் இருந்து...

எனக்குள் கவிதைகள் எழுதும் உணர்வுகள் இருந்ததோ, இல்லையோ நானறியேன். உண்மையில் கவிதைகள் எழுதும் ஆசைகளுக்கு எனக்கு உந்து சக்தியாக இருந்தது 'கல்கி'யில் வெளிவந்து கொண்டிருந்த 'குறிஞ்சி மலர்' தொடர் கதைதான். அதன் ஆசிரியர் மணிவண்ணன் குறிஞ்சி மலரை அழகு தமிழில் எழுதிக்கொண்டிருந்தார்.

அந்த இனிய தமிழ் என்னை ஆக்கிரமித்துக் கொண்டது. அக்கதையின் கதாபாத்திரங்களான கவிஞர் அரவிந்தனும், 'பூரணி' எனும் இலட்சியப் பெண்ணும் எனது உணர்வுகளுக்குள் சங்கமித்துக் கொண்டே இருந்தார்கள். அவர்களின் சங்கமமும், மணிவண்ணனின் கவிதை சார்ந்த இனிய தமிழும் எனது உள்ளத்திலிருந்து கவிதை ஊற்றுக்களைத் திறந்துவிட்டன. எழுதத் தொடங்கினேன்.

கவிதை எழுதும்போதெல்லாம் எனக்குள் ஏதோ எழுத்தில் வடிக்கமுடியாத இங்கிதங்கள் விளைந்து கொண்டே இருக்கும். அக்கவிதை வரிகளில் எனது இலட்சியங்களைப் படைப்பதாக எனக்குள் உணர்ந்து கொள்வேன். இந்த உணர்வுகளுடனேயே அறுபதுகளில் மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றேன். அங்கே பண்டிதர் செ.பூபாலபிள்ளை அவர்களின் வழிகாட்டல்கள் மேலும் எனது கவிதையூற்றுக்களை மேலோங்க வழி செய்து வைத்தன.

'வந்தது வசந்தம்' இதுதான் 'தினகரன்' பத்திரிகையில் வெளிவந்த முதற்கவிதை. இக்கவிதை வெளிவந்தபோது நானடைந்த ஆனந்தத்தை அளவிடவே முடியாது. எனது பிறந்த மண் ஆலங்கேணியும் எனது கவிதை உணர்வுகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கபலமாக இருந்தது என நம்புகிறேன். கவிஞர் தாமரைத்தீவானை திருகோணமலை மாவட்டக் கிராமங்களில் அறிமுகம் செய்து பிரபல்யமடையச் செய்தவர் கவிஞர் கேணிப்பித்தன் என்பதனை நன்கறிவேன். கவிஞர் தாமரைத்தீவான் தலைமையில் கவிஞர் கேணிப்பித்தன், ஈச்சையூர்தவா, திருக்கோணமலைக்கவிராயர். ஆகியோருடன் திருக்கோணமலை மாவட்டத்தின் மூலை முடுக்கெல்லாம் நடக்கும் கவிதை அரங்குகளில் எனது கவிதைகளை முழக்கமிட்டு வந்தேன்.

கவிஞர் அண்ணல் அவர்களது தோழமை, அவருடைய பண்புமிகு வழிகாட்டல்கள் எனது கவிதை உணர்வுகளுக்கு மேலும் வழிசமைத்துத் தந்தன எனக்கூறுவதில் மகிழ்ச்சியும். பெருமிதமும் அடைகிறேன். கவிதைகளை எழுதி எழுதிக் குவித்தேனே தவிர. அவற்றை அச்சிட்டு நூலுருவில் வடிவமைக்க என்னால் முடியவில்லை. ஆனால் எப்படியும் எனது கவிதைகள் நூலுருப் பெறும் என்பதில் நம்பிக்கை இருந்தது. அவ்வளவுதான் என்னால் கூறமுடியும்.

'பொங்கினாள் மீனாச்சி'எனும் இக்கவிதைத் தொகுப்புத்தான் எனது முதற் கவிதைத் தொகுப்பாகும் என எண்ணுகிறேன். எல்லாம் இறைவன் சித்தம். எது நடக்க வேண்டுமோ அதுதான் நடக்கும். இந்த நூலை உங்கள் கைகளில் தவழவிட நான் எடுத்த முயற்சிகள், அவஸ்த்தைகள் கொஞ்சநஞ்சமல்ல. 'உங்கள் கவிதைகளை நூலாக்கி வெளியிடுங்கள்' என அன்பு நெருடர்களைக் கூறிவைத்த அறிவுசார் நெஞ்சங்கள் பலரை மனதிருத்திப் பார்க்கிறேன். உங்கள் நெருடல்கள்தான் மீனாச்சியின் பிரவேசத்துக்கு முக்கிய காரணமாகின்றன என்ற நன்றி உணர்வுகளை உங்கள்முன் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கவிதை வளர்ச்சிக்குக் களம் அமைத்துத்தந்த பத்திரிகை நிறுவனங்களையும் என்னால் மறக்கவே முடியாது. குறிப்பாக வீரகேசரி, தினக்குரல். தினகரன், மித்திரன் வாரமலர், சுதந்திரன், சிந்தாமணி. ஆதவன் எனப் பத்திரிகைகளின் அன்பு நெஞ்சங்கள் எனக்களித்த ஊக்கங்களுக்கும், உற்சாகங்களுக்கும் என்றும் நன்றியுடையவனாக இருக்கிறேன்.

'பொங்கினாள் மீனாச்சி'யின் அட்டைப்படத்தை வடிவமைத்துத் தந்த எனது மருமகன் அ.அருள்பாஸ்கரன், இந்நூலைப் படித்து அழகான அணிந்துரை தந்த எனது நண்பர் முதுபெரும் கவிஞர் தாமரைத்தீவான் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவிக்கின்றேன். என்னைப் பற்றிப் பின்னட்டையில் எழுதி இந்நூல் வெளிவரக்காரணமாக இருந்த எழுத்தாளர் கவிஞர் கேணிப்பித்தன் ச.அருளானந்தம் அவர்களை என்னால் மறக்கவேமுடியாது. அவருக்கு என்றென்றும் கடமைப் பட்டுள்ளேன். நான் விட்டுச் செல்வதை அவர் தொட்டு முடித்துவருபவர். அவருக்கு என்றென்றும் நன்றியுடையவனாக இருக்கிறேன்.

எனது அன்பிற்குரிய வாசகர்களே! எனது 'பொங்கினாள் மீனாச்சி' எப்படி இருக்கிறாள்? நான் இதனைப் பார்ப்பேனோ தெரியாது. அப்படியான சூழல் நமது தமிழ் சமூகத்தில் நிலவுகிறது. எப்படி இந்நூல் உள்ளது என்பதனை நீங்கள்தான் துணிந்து கூறவேண்டும். தயங்காமல் கூறுங்கள். நான் இதனையே பெரிதும் விரும்பி வரவேற்கிறேன். உங்கள் யாவருக்கும் இருகை கூப்பி நன்றியினைத் தெரிவிக்கின்றேன்.

ஆலங்கேணி
கிண்ணியா

**-ஆலையூரன் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே.....


- பொங்கினாள் மீனாச்சி
- மெல்லத் தமிழ் இனிச்சாகாது.
- என்ன லாபம்
- கூடையும் கையும்
- தத்தை உரை
- சிலையானாள்
- ஒன்றுமே பிடிக்கவில்லை
- மூன்றாம் நாள்
- பூங்காற்றே ...பூங்காற்றே
- விடை கொடுத்தாள்
- உறுதி கொள்
- காட்சிக் கோலங்கள்
- இது எங்கள் மண்
- காத்திருப்பேன்
- பாவேந்தன் பாரதிதாசன்
- மானிடம் மலருமா?
- அழகைப் பார்
- மீண்டும் இந்து.
- வாடக் கண்டறியேன்
- வந்திடுவாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விடிவு எப்போது?
- வாழ்வதா சாவதா?
- துணிந்து வெல்.
- சுதந்திரம்
- அழுது வடிக்கின்றேன்
- துடிக்கின்றேன்
- பார்வதி ஆச்சி
- நெஞ்சாரச் செய்
- கனாக் கண்டேன் தோழி
- எல்லாமே போச்சுது
- ஒன்றாய்
- உணர்த்துகின்றோம்
- என்ன நியாயம்?
- உலா வருவோம்.
- எதுவும் வேண்டாம்.
- நாளை எங்கள் வானில்..
- நில்லடியோ
- கேட்கிறேன்
- ஓயமாட்டோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கினாள் மீனாச்சி

மீனாச்சி என்ற அந்த
  மின்னல் இடையணங்கு
மானாள், மயில் நடையில்
  மாவின்வடு விழியாள்!
தேனாள் தன் அத்தானின்
  தோளில் தவழ் தத்தை!
வானின் மதி தோற்கும்
  வண்ணமுக வழகி!

சென்ற தைப் பொங்கலன்று
  செவ்விதழ் சிவப்பேற
அன்று தன் அத்தானின்
  அழகுக் கரம்பிடித்ததனை
நன்றாய்த் தன் இதயத்துள்
  நிறைத்த இப்பேதையிவள்
இன்றோடு ஒரு வருடம்
  எண்ணி மகிழ்கின்றாள்!

இந்த ஒரு வருடத்தில்
  எத்தனையோ இங்கிதங்கள்!
சொந்த அரவ ணைப்பில்
  சுகங் கண்ட அனுபவங்கள்
செந்தேன் இதழ் சுவைத்த
  செய்கை பல அத்தானின்
அந்தரங்கச் செய லெல்லாம்
  அவள் நினைத்துக் கொள்ளுகிறாள்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டழகன் அத்தானின்
   கரம்பறித்த வெண் மணலை
சிட்டு எனப் பறந்தோடி
   சிந்தை மகிழ் வூட்ட
இட்ட அடி நோவெடுக்க
   இதமாக நடை பயின்று
கொட்டி யெழில் முற்றத்தில்
   குவித்தழகு மேடையிட்டாள்!

முற்ற மெலாங் கோலங்கள்
   முழுமதியாள் போட்டழகு
கற்பனையில் மிதக் கின்றாள்
   காளை, அவள் அழகு
விற்புருவம் வளைந் தாட
   விர லங்கு தாளமிட
அற்புத மாய்க் கோலமிடும்
   அழகை ரசிக்கின்றான்!

வெண்ணிலவு வானூர்ந்து
   வெள்ளியுடன் கொஞ்சு நிலை!
கண்ணயரா நின்று அந்தக்
   காரிகையாள் பொங்க லுக்குத்
தன்னுடைய அத்தான் தன்
   தோளி ணைந்து ஆனபணி
கன்னல் சுவையுடை யாள்
   கணப் பொழுதிலா ற்றுகிறாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைப் பழித்த விழி
வஞ்சி யவள் மீனாச்சி
நூலாள் இளைத்த அந்த
நுண்ணிடையோ நோவெடுக்க
நாளை நறும் பொங்கலுக்கு
நல்லாடையணிகளுமே
காளை தன் அத்தானுடன்
கச்சிதமாய் வாங்கி வைத்தாள்!

காலை பால் பட்டியிலே
கறந் தெடுத்துக் கொண்டதிலே
காலம் உணர்ந் துதவும்
கதிரோன் வருகையினால்
சால விளைந்த நல்ல
சம்பா அரிசியிட்டு
கோலம் மிளிர் பொங்கலிட
கோதையவள் காத்திருந்தாள்!

செங்கரும்பு உண்டழகு
சிறந்த முக்கனிகளுண்டு
பொங்குதற்கு இனியென்ன
வேண்டுமெனச் சிந்தித்தாள்!
அங்குலங்களேது மின்றி
அங்கழகு செய்கின்றாள்
பொங்கலவர் முதற்பொங்கல்
பூரிப்புக் குறைந்திடுமா?

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கலோ பொங்கலென்று
புதுப்பானை வைத்துமனை
பொங்குதற்கு நாடுமிந்த
பூ நிகர்த்த செவ்விதழாள்
செங்கரங்கள் தொட்டணைத்துச்
சேதி சொலத்துடிதுடிக்கும்
நங்கையிவள் அத்தான்முன்
நாணிமுகம் நோக்குகிறாள்!

வானில் பூப் பூத்ததுபோல்
வெள்ளிபல காட்சியிட
மோனநிலை புவியெல்லாம்
முதுபனியும் பெய்கிறது!
ஆன இவ்வேளையங்கு
"ஐயோ" எனும் அலறல்
மீனாள் இது கேட்டு
மெய்பதறி நோக்கிறாள் நோக்குகிறாள்!

துப்பாக்கி வேட்டுக்களாய்....
தொலைதூரம் அல்ல அவை
சப்பாத்துக் காலரவம்
சாடிவர அது கேட்டு
அத்தான் கரந்தொட்டு
அவள் நடுங்கிக் கொள்வதுடன்
முத்துப்போல் வியர்வையவள்
முகம் வழிய நிற்கின்றாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடுதலாம் வீடெல்லாம்
துப்பாக்கி வேட்டுடனே
ஓடோடிப் படையினர்கள்
ஒருவர் பின் ஒருவரென
வீடுவீடாய் கைது செய்யும்
வேலையினைச் செய்கின்றார்
கேடறியா ஊர்மக்கள்
கண்கலங்கி உயிர்துடித்தார்!

எண்ணி முடிப்பதற்குள்
ஏராளம் படையினர்கள் !
கண்ணீர்க் கதையாச்சு
கைது தொடர்கிறது!
உண்மை நிலை தெரியாது
ஊரார்கள் பேதலித்தார்!
மண் கலந்த பொங்கல் மணம்
மாறியங்கு தேய்கிறது!

ஆரார்கள் மிஞ்சினார்கள்?
ஆர் தப்பிக் கொண்டார்கள்?
பேருண்மை எவரிடத்தும்
பெரிதாகத் தெரியவில்லை!
கூர் விழியாள் மீனாச்சி
காதலனுங் கைதானான்!
பேரிடியைப் பெற்றாள் அப்
பேதை நிலம் சாய்ந்தாள்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருண்டாள் உயிர் துடித்தாள்
உருகி மனம் சோர்வுற்றாள்!
புரண்டழுது பாதுகாப்புப்
படையிடத்து மண்டியிட்டாள்!
அப்படையோர் அசையவில்லை!
இரண்டு (உ)தைகள் மார்பகத்தில்
எற்றவளுந் துவளுகிறாள்!

துவண்டழுத அப்பேதை
தலைவிரித்த கோலமுடன்
தவறிழைத்த பாண்டியனைத்
தண்டித்த கண்ணகிபோல்
பதறித் துடி துடித்து
பாவையிவள் சாடுகிறாள்
சிதறித் தெளிக்கிறது
சீற்றத்தின் வெளிப்பாடு!

பொங்கி எழுந்தாளப்
பேதை இளம் மீனாச்சி
அங்கிருந்தோர் தனைப்பார்த்து
அவ்விளையாள் கூறுகிறாள்!
"உங்கள் கொடுமைகளை
உலகத்தார் ஏற்பாரோ?
எங்கள் பெருமூச்சு
இனியறுக்கும் நிச்சயமே!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்குதற்கு மேடையிட்ட
புதுமணலைக் கையள்ளிப்
பொங்கி எழுந்தாளப்
பூவை முகஞ் சிவப்பேற
"இங்கு இனிப் பொங்கலிலை
இக்கரத்தால் செய்வதெனில்
இங்குகெமக்கு ஒரு வீடிவின்
பின்" பென்றே சூளுரைத்தாள்!

பொங்கல் குதூகலங்கள்
போன இடந்தெரியவில்லை!
எங்கும் எவர் மனமும்
எல்லாமே அவலங்கள்!
அங்கிளைய மீனாச்சி
அவளுரைத்த சூளுரைகள்
அங்குள்ளோர் உள்ளமெலாம்
அரவணைத்துக் கொள்கிறது.

வீரகேசரி -

**21.01.1996**

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெல்லத் தமிழ் இனிச்சாகாது

கன்னல் சாற்றுடனே
கற்கண்டு தேன்கலந்து
வெல்லச் சுவையூட்டி வைத்தாலும்
அச்சுவையை
வெல்லும் தமிழ்ச் சுவையாம்!

வங்கக் கடல் பரப்பால்
வற்றாத எங்கள் நதிப்பரப்பால்
எங்கள் தமிழ் இனிமை
பூத்த கதை எத்தனை தான்!
சிங்கத் தமிழாய் சிரந்தாழ்த்தாச்
செந்தமிழாய்
பொங்கும் தமிழாய் புவனம் வலம் வந்து
எங்குந் தழைத்த கதை எத்தனைதான்!

மாற்றார் படை நடுங்க
வல்லாண்மை மிக்க நம்
மறவர் பெரும் படைகள்
விறல் மேல் விறல் பெற்ற
வீர, வரலாறு எத்தனைதான்!

நெஞ்சில் திறனும் நினைப்பில்
தமிழ் உரமும்
மிஞ்சவே அத்தமிழர் பெரும் படைகள்
வெஞ்சினத்தின் உந்தலுடன்
வீறு கொண்டெழுந்ததுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சேல் அஞ்சேலென்று
ஆர்ப்பரித்துக்
கொஞ்சு தமிழ் உணர்வும், தாம்
கொண்ட மண்பற்றும்
கொண்டு செருக்களத்தில்
விண்டுரைக்க முடியாத
விறல் பெற்ற வரலாறு கொஞ்சமதா?

மாமுனிவர் மன்னர் புலவர்களும்
தேன் சொரியும் எம் தமிழைத்
தாலாட்டிச் சீராட்டி
தக்க பணி செய்தனராம்!
பூ மாலை வாடுமென்று
புலவர் பெருமக்கள்
பாமாலை சூட்டியுடன்
நைந்த பொழுதெல்லாம்
நம்முதிரம் வீறுகொள
பைந்தமிழால் அடியெடுத்து
பலமூட்டி வைத்தனராம்!

தான் தமிழில் கண்ட பிழை
சாற்றுதற்குத் தயங்காத
நம்புலவன் நக்கீரன்
கன்று துள்ளி நின்றதுபோல்
கவிவாணர் மத்தியிலே
நின்று, சிவன் நெற்றி விழி
கொன்று விடுமாப் போல் பாய்ச்சி
நின்ற பொழுதும் நிலையழியாது

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று சொன்ன வாசகத்தை
இன்றெண்ணிப் பார்க்கின்றேன்!
"நெற்றிக் கண் காட்டிடினும்
குற்றம் குற்றமதே"
நற்றமிழின் புகழ் இதனை
விட என்ன வேண்டுவதோ....?

கல்லில் சிலை வடித்தும்
கவின் மிக்க
சொல்லில் கவிபடைத்தும்
வில்லில் விறல் படைத்தும்
இல்லை யெனச் சொல்லாது
கையில் கொடை படைத்தும்
மெய்மை தன்னை பூணாகக்
கொண்டு
ஐயம் அறப் படைத்தும்
ஆண்ட குடி எம்குடியாம்.

கொடுத்து சிவந்த கரம் அன்றி
எடுத்துச் சிவந்த கரம்
இல்லையெம் எழில் குடிக்கு!
அடுத்தவரை ஏய்த்து அழித்து
அறந்து டைத்த கதையெல்லாம்
இல்லையெம் மறக்குடிக்கு!

இனிய தமிழ் உணர்வில்
எங்கள் குடி மக்கள்
எங்கெங்கும் வாழுகிறார்
"உடல் மண்ணுக்காய்
உயிர் தமுக்காய்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற உணர்வோச்சி
உடல் வேறாயிடினும்
உயிர் ஒன்றுணர்வுடனே
கடல் கடந்தும் வாழ்கிறார்!
ஆதலினால்,

மெல்லத் தமிழ் இனிச் சாகுவதா?
சாகாது! சொல்லிவிடின்!
இல்லையதற்குச்சா!
இனிமை பூத்தெங்கும்
எழிலாட்சி செய்துவிடும்!
பொங்குதமிழ் அன்றோ
அதன் எழில் பூத்து
பொங்கும் உலகெங்கும்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன லாபம்

மலையில்லாத நாடும்
மானில்லாத காடும்
அலையில்லாத கடலும்
அழகில்லாத கலையும்
நிலவில்லாத வானும்
நீரில்லாத நிலமும்
மலரில்லாத மனையும்
மனம் மகிழச் செய்யா(து)!

குளங்களில்லா வயல்கள்
கோயிலில்லா ஊர்கள்
பழங்களில்லாச் சோலை
பாடலில்லாப் பள்ளி
வளங்களில்லா நாடு
வளர்ச்சியில்லாத் திட்டம்
விளங்கா உலகிலென்றும்
விளைவு பெரிது மில்லை!

கருத்து அற்ற சொற்கள்
கருணையற்ற மாந்தர்
பொருத்த மற்ற தலைமை
பூசி மினுக்கும் பேச்சு
விருப்பமில்லாச் செய்கை
வீணாய்க் கழியுங்காலம்
வருத்தி உழைக்காச் செல்வம்
வாழ்க்கைக்குதவிக் கொள்ளா(து)!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகள் காட்டாப்பள்ளி
வாண்மையில்லா ஆசான்
மொழிகள் பேணா மக்கள்
முரசமில்லா ஆட்சி
தொழில்கள் காட்டாச்சாலை!
தொன்மை பேணாத் தேசம்
எழில்கள் பேணா நெஞ்சம்
இருந்து மென்ன லாபம்!

பெண்மை காக்கா நாடு
பேசிமுடிக்காச் செயல்கள்
தன்னை ஈயாத் தலைவன்
தளர்வில் உதவா அமைச்சு
புன்மை கலையா மாந்தர்
புதுமை படைக்காப் புலவர்
இன்னல் களையா நட்பு
இருந்து மென்னலாபம்!

தன்னைக் காக்காப் பெண்மை
தகைமை காட்டாக் கூட்டம்
உண்மை பேசா உறவு
உயர்வைக் காட்டாத் தந்தை
தன்மை ஈயா அன்னை
தானாச் செய்யாச் சேய்கள்
எண்ணி உதவாச் சுற்றம்
இருந்து மென்னலாபம்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏங்கித் தவித்தேன்

மலைச்சாரல், மாலை கருகியவேளை
மேகத்துள் மறைந்து வெண்ணிலா
மங்கியதாய் ஒளி பரப்பி
விந்தை காட்டிய வேளையது!

எங்கும் இதமளிக்கும்
இன்பச் சூழ்நிலை!
அவள் வந்தாள் !
ஆம், என்னவள்தான் வந்தாள்!

குங்குமத்தை வென்ற இதழ்கள்!
தங்கத்தால் வடித்த மேனி!
சங்குக் கழுத்தழகு!
நூல்போல் நுண்ணிய இடை!
நுங்குபோல் இதமளிக்கும் மார்பகங்கள்!

சின்னக் குடைபோல் விரியும்
சிந்தையள்ளும் விழிகள்!
வங்கக் கடலலை போல்
வஞ்சியவள் கருங்கூந்தல்!
பொங்கும் எழில் காட்டிப்
புன்னகைக்கும் அவள் கன்னம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவா? இன்னும் அழகுடையாள்!
என்னவளைக் கேட்டேன்!
"என்ன தாமதமோ...?
இத்தனைக்கும் என்செய்தாய்...?

உன்னை நினைத்து உள்ளார உருகி
உவ்விடத்தில் உட்கார மனமின்றி
உன்வழி பார்த்து என்விழி சோர்ந்து
உருக்குலைந்த நிலையானேன்!"

மெல்லப் புன்னகைத்தாள்!
"மணிக்கணக்காய் ஆகவில்லை!
மாலை மஞ்சள் வெயில் போனதடம்
இன்னும் அழியவில்லை!
இத்தனைக்குள் அவசரமா...?

செங்கரும்பைப் பிழிந்தெடுத்துத்
தேன் கலந்த இனிய அவள் வார்த்தைகளில்
வாய் மூடி மௌனி ஆனேன்!

மேகத்துள் மறைந்த அவ்வெண்ணிலவு
வெட்ட வெளிவான் வெளியில் வந்து
என்னவளின் அழகு - எழில் முகம் பார்த்துச்
சோர்ந்ததுவாய் எனக்குள் ஓர் தற்பெருமை!

ஏதேதோ எல்லாம் இனிய
உரை பகன்றோம்!
இரவு ராணிப் பூக்களின் பால்
இதமான வாசனைகள்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைச்சாரல் மலர்களிலே
வண்டூதும் இனிய நாதம்!
குளிர் வானைத்தடவி
மலைச்சாரல் மலர்தழுவி வந்துற்ற
இளம் வாடைக் காற்றெம்மை
இறும்பூத வைத்ததுவாம்!

பனிப்படலங்கள்! பசுப்புற்றரை வெளிகள்!
எமை மறந்தோம்!
எங்கெங்கோ எல்லாம்
ஏகாந்தப் பயணங்கள்!

என்னன்னை தொட்டென்னை
"எழும்பு ! எழும்படா" என்றாள்
"ஏழு மணியாச்சு"
மேலுமவள் தொணதொணத்தாள்!
மெல்ல விழி திறந்தேன்!
என்ன இனிய அனுபவங்கள்!
இவ்வேளை எதையோ இழந்தவன் போல்
ஏங்கித் தவித்தேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடையுங் கையும்

மனதுறை மலையகந்தன்னில் - அங்கு
வாழ்ந்திடுங் காமாட்சி என்பாள் - அவள்
நாளும் தொழில் புரிந்துண்பாள்!

கூனல் பிறைநுதலூடே - வியர்வை
கொட்டிச் சிதறிடுமங்கே - இந்தக்
கோதை சோர்வதே இல்லை!
வானம் கறுத்திடும் போதும் - காற்று
வளைத்து வதைத்திடும் போதும் - தன்
வழமை மறந்திடமாட்டாள்!
மானம் பெரிதெனக் கொண்டு - மலை
வாசம் அதனுடன் உந்த - இவள்
வாழ்வு மலையகம் மின்னும்!

காலை எழுந்ததுங் கோதை - பழங்
கரைசல் குடித்தவள் கூடை - அது
கொஞ்சமுதுகினில் கொள்வாள்!
காலைக் குளிர்பனி காற்று - அங்கு
கடித்து வருத்திடுமட்டை - அவள்
கணக்கில் எடுப்பதே இல்லை!
நூலாய் இடையது நோவ - பனை
நுங்காய் மார்பகந்துள்ள - மனம்
நாடியுழைத்திடும் பாவை!
காலம் முழுதுமே ஓயாள் - சிறு
களவு, பொய்தனை அறியாள் - அவள்
கனவு மலையகம் ஒன்றே

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை பூவிரலங்கே - துளிர்
நேர்த்தியாய் ஆயுதல் செய்யும் - அவள்
நெஞ்சங்குளிர்ந்திடச் செய்யும்!
கூர் விழி ஆயிரம் சொல்லும் - அவள்
கூடவே தோழியரோடு - தளிர்
கூடை நிறைந்திடச் செய்வாள்!

கார்குழல் மார்பகந்தோய - அங்கு
கடுங்குளிர் தாக்கிடும் போதும் - அவள்
காரியம் மறந்திடமாட்டாள்!
கூர் நிறைக் கற்களினூடே - அவள்
கூடை முதுகினில் தாங்கி - அந்தக்
கோதை உழைப்பது பாரீர்!

சுள்ளியாய் உடம்புடன் இந்த - இளஞ்
சுந்தரி "காமாட்சி" என்பாள் - மலை
சுற்றித் திரிந்திடும் சிட்டாள்!
பள்ளம் படுகுழி வாழ்க்கை - அவள்
பாதை வறுமையில் துஞ்சும்! - அதில்
பட்டினி வறுமையில் மிஞ்சும்
அள்ளி எடுத்திடும் தேர்தல் - வந்து
ஆயிரம் ஆசைகள் கூறும் - பின்
ஆருமே வந்திடமாட்டார்!
நல்லதோர் காலத்தை எண்ணி - இந்த
நங்கை வாழ்கிறாள் நாளும் - அது
நாடி வருவது எப்போ(து)..?

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னக் கூலியே கொள்வாள் - அவள்
செய்வதோ ஆயிரம் சேவை - அதை
ஆறுதல் இன்றியே செய்வாள்!
என்னவோ புதுமைகள் எல்லாம் - உலகம்
எங்கும் நிறையுது கண்டோம் - இந்த
ஏழையில் மாற்றமே இல்லை!
புன்னகை மாறிடாக்கோதை - தன்னில்
பொன்னகை ஒன்றுமே இல்லாள் - மனம்
பொங்குதல் ஏதுமே செய்யாள்!
இன்னும் நாளெண்ணிக் கொண்டே - இந்த
எழில் பெறும் மலையகந் தன்னில் - மீண்டும்
ஏழையாள் கூடையுங்கையும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தத்தை உரை

காலையிளங்காற்று
  கடல் பரப்பை முத்தமிட்டு
சோலை, வயல், பூங்கா
  சுறு சுறுப்பாயிவை தொட்டு
நாலா புறமெங்கும்
  நளினங்கள் தான் செய்தும்
கோல் விளைவித்துக்
  குதூகலங்கள் செய்ததங்கு!

இவ்வேளையக் காலையதில்
  இளைய ஆண் தத்தையொன்று
ஒவ்வோர் மரக்கிளையாய்
  ஓய்வின்றித் தாவியது!
அவ்வேளையத் தத்தையதன்
  அழகான செவ்வியது
தொய்வு, துயர் கூட்டி
  துலாம்பரமாய்க் காட்டியது!

பூக்கள் நிறைந்த அந்தப்
  புன்னகைக்குஞ் சோலையதில்
தூக்கம் எதுவுமின்றி
  துயர் கூட்டுச் சாயலுடன்
கீக்கீயென்றழகாய்க்
  கிள்ளையது குரலெழுப்பி
ஏக்கத்தோடங்கே
  எங்கு முலாவியது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன இக் கிள்ளைக்கு
  நேர்ந்ததொரு வில்லங்கம்?
சின்ன நடை கூட்டி
  சிந்தித்தேன் அவ்விடத்தில்
என்னையது பார்க்கவில்லை
  ஏதேதோ சிந்தனையில்
தன்னை மறந்து அது
  தளர்வோடு இருந்ததங்கு!

பச்சை நிறழவகும்
  பவளம் போல் வாயழகும்
அச்சில் வடித்தது போல்
  அழகான கண்ணழகும்
மெச்சும் பேச்சழகும்
  மேலான நடையழகும்
பிச்சு எனைப் போட்டுலுப்ப
  பேசத் துடிப்புற்றேன்!

"கிளியாரே உந்தனுக்குக்
  கவலை நிறைந்ததென்ன...?
விழியோர வேதனைகள்
  வாட்டத் தனிமையிலே
தளிர் கோதாதிங்கு என்ன
  தனிமையில் வாடுகிறீர்?
பழியாருஞ் செய்தனரா?"
  பரிவோடு கேட்டேன் நான்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்ன உரைகேட்டுச்
சீக்கிரமாய் அத்தத்தை
இன்னோர் மரக்கிளைக்கு
இங்கிதமாய்த் தாவியது!
கண்ணை உருட்டியது
கழுத்தைத் திருப்பியது!
என்னையது நோக்கவில்லை
எங்கெங்கோநோக்கியது!

இன்னும் முன் சென்று
இதமாய் வழி சேர்த்து
"என்னினிய கிளியாரே
என்னை நீ நம்பி விடு!
உன்பால் அன்புடையேன்
உள்ளத்தால் உரைக்கின்றேன்
என்ன உனக்கிங்கு
உண்டான துயர்கூறு!"

என்றுரைத்தேன் இனிதாக
அங்கோர் மௌனநிலை!
கண்ணீர்த் துளியொன்றைக்
கையணைத்துக் கொள்கிறது!
"மண்ணில் மனிதர்களால்
மாய்ந்து மடிகின்றோம்
கண்ணீர் வெள்ளத்தில்
கவலைகளில் தோய்கின்றோம்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைக் கிளியங்கு
   பேசி முடிக்கின்றது!
உச்சியில் அடித்தது போல்
   உரை கேட்டு எனை மறந்தேன்!
அச்சமயம் ஆங்கே
   அண்ணார்ந்து பார்த்து நான்
மிச்ச உரை கேட்க
   மிக்காவல் கொள்ளுகிறேன்!

கீக்கீ எனக் கிளியார்
   கீதம் உரைத்தங்கு
நாக்குத் தளர்வுடனே
   நான் கேட்கக் கூறியது
"ஆக்கினைகள் போதுமினி
   அஞ்சி நாம் சாகின்றோம்"
தேக்கு மரமிருந்து
   தத்தையுரை தொடர்கிறது!

"அங்கேயென் ஆருயிராள்
   அவ்வில்லம் தனிலிருந்து
தொங்குஞ் சிறைக் கூண்டில்
   துயரத்துள் மூழ்கின்றாள்!
எங்கள் குரல் கேட்க
   இன்பம் பெருகிறதாம்!
எங்கள் சிறை வாழ்க்கை
   இன்பமாம்மானிடர்க்கு!"

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பட்சியின மெங்களுக்குள்
பாகுபாடு ஒன்றுமில்லை!
கட்சி, குலம், சாதி
காட்டு வதுங்கிடையாது!
உட்பகைகள் ஒன்றுமில்லை!
ஒன்றாய் இச்சோலைதனில்
மட்டற்ற மகிழ்வோச்சி
மனதார வாழுகிறோம்!"

"எங்கள் குலமழிக்கும்
இம்மனிதச் சாதியதில்
தங்களுக்குள் பலசாதி
தனவந்தர் ஏழையென
எங்கெங்கும் பிரிவினைகள்
ஏராளம் பகையுணர்வு!"
அங்கந்தக் கிளியுரைத்து
அடுத்த கிளை தாவியது!

வெட்கம் ஒரு பாதி!
வேதனைகள் மறுபாதி!
கொட்டி எனை மாய்க்க
கிளியாள் உரை கேட்க
ஒட்டாத மனதுடனே
ஓருரையும் பகராது
கட்டைபோல் காலசைத்து
கா நீங்கிக் கொள்ளுகிறேன்!
சிலையானாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தை மலர்ந்து வந்தாளித்
தரணியெல்லாம் பூ வாசம்!
பொய்யா எழிலெங்கும்
பூரிப்பு இல்லமெல்லாம்!
மைவார் விழி மகளிர்
மனங்களிலோ பூரிப்பு!
ஒய்யார நினைப்பலைகள்
உலகம் மகிழ்கிறது!

கையசைத்துப் பூங்காற்று
கனிவாய் அழைக்கிறது!
பெய்யும் பனிப் புகார்கள்
பெரிதாய் அணைக்கிறது!
கொய்யா மலரெங்கும்
கொஞ்சி விடத்துடிக்கிறது!
கையடித்துக் குருகினங்கள்
கரகோசஞ் செய்கிறது!

செல்லுமிட மெல்லாம்
செல்லடிகள் மழைபோன்று
அல்லோலப் படுத்த அழும்
அழகு வன்னி நிலத்தினிலும்
முல்லைப் பூப்பூத்தது போல்
முறுவல் தனைக் காட்டி
சொல்லரிய தையணங்கு
சிரித்து முகமலர்ந்தாள்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவுகள் மத்தியிலும்
அழகு வன்னிப் பூநிலத்தில்
இளையோர் முதியோரென
எல்லோருஞ் சேர்ந்திவளை
மழைபோல் மலர்தூவி
மங்கல நீர் தாம் சொரிந்து
கிளையோடு வரவேற்குங்
கீர்த்தி குறையவில்லை!

காட்டு வளமென்ன
கழனி வளமென்ன
பாட்டு வளமென்ன
பாவலர் தம் வளமென்ன
தோட்ட வளமென்ன
தொழிலாளர் வளமென்ன
கூட்டு வளமென்ன
குறையாத வன்னி நிலம்!

எங்கும் எவரிடத்தும்
இதயங்கள் பூத்ததுவாம்!
கங்கை போல் மகிழ்வெய்தி
கைகூப்பி நிற்கின்றார்!
வங்கக் கடல் பரப்பும்
வரவேற்றுக் கொள்கிறது
பங்கிற்கு அலைக்கரங்கள்
பாவிசைத்துக் கொள்கிறது!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யா வயல் பரப்பில்
பூரிக்கும் நெற்கதிர்கள்!
தையாள் வரவு கண்டு
தலையசைத்துக் கொள்கிறது!
கொய்யா மலரமர்ந்து
குதூகலிக்கும் வண்டினங்கள்
"தையே!" என ஊதித்
தாம் மகிழ்வு கொள்கிறது!

இத்தனைக்கும் மத்தியிலும்
இங்கோர் தனியிடத்தில்
இத்தையாள் வரவு தன்னில்
இதயம் மகிழ்வின்றி
புத்தம் புது மலர்ச்சி
பூரிப்பு ஒன்று மின்றி
'சித்திராங்கி' பெயரிவளோ
சிலையாள் அமர்ந்திருந்தாள்!

வீரர் கையிருக்கும்
வேல்போல் அழகு விழி!
தீரா வேட்கை தரும்
தித்திக்கும் இவள் பார்வை!
போராடுங் கடலலை போல்
பூவையிவள் குழலழகு!
சீராய் வடித்த இடை!
சிறு கொடிபோல் காணுமுடல்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி நிலச் சிட்டாள்!
வளமான வன்னி நிலக்
கன்னல் சுவை போல
கனிவான சொல்லழகி!
இன்னும் பார் என்றழைக்கும்
இனிய முகவழகி!
புன்னகையோ புதுறோசா
போல் மிளிரும் பாவையிவள்!

புத்தம் புது றோசா
புன்னகையை இழந்தது போல்
சித்திரத்தின் கோலமது
சீரிழந்து போனது போல்
இத்தனை அழகெல்லாம்
இவள்பால் குறைந்திவளின்
முத்தனைய முறுவலவை
முழுதும் இழந்திருந்தாள்!

பொட்டுப்பூ மறந்தாளிப்
பூவை முகத்தினிலே
சொட்டளவும் மகிழ்ச்சியிலை!
சோர்ந்த வதனமுடன்
பட்ட மரம் போன்று
பாவையிவள் வாடலுற்று
கொட்டிலுக்குள் தனிமையிலே
கண்ணீர் கசிய நின்றாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன நடந்ததுவோ?
இவ்விளைய பூங்கொடிக்கு!
கன்னத்தில் கவலை மிகு
கருங்கூந்தல் அவிழ்ந்த நிலை!
வண்ணக் கரங்களிலும்
வளையோசை எதுவுமில்லை!
பொன்னுடலில் பொலிவின்றி
பூவை தனித்திருந்தாள்!

ஆமாம் அவளத்தான்
அழகன் "அமுதன்" என்பான்
தேன் போல் பழகியவன்
திண்டோள் இளங்காளை!
கான், வான், கடலெல்லாம்
கனலாய்ச் சமர்செய்து
தான் போனான் மண்ணிற்காய்
தவித்தாளிப் பாவையிவள்!

மண்ணுக்காய்த் தன்னுடலை
மாய்த்த மாவீரன்!
தன்னாவி போனது போல்
தவித்தாள் இவனையெண்ணி!
கண்ணீர் கண்ணீராய்
காலமெல்லாஞ் சொரிந்தாளிப்
பெண்ணாள், துயர் வெள்ளப்
பிடியதனுள் பட்டுழன்றாள்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணுகிறாள் இத்தினமே
எந்தனுயிர் உண்டதினம்!
கண்ணீர் கடலெனவே
கன்னத்தால் வழிகிறது!
பெண்ணுடலன்றோ? ஆ
பெரிதாய்ச் சோர்கிறது!
என்னென்பேனிவள் துயரம்!
எழுத்தில் வடிக்க ஒணா!

எண்ணுகிறாள் மேலுமிவள்
எந்தனுயிர் சொன்னாரவர்
"பெண்ணே! துயரழிப்பாய்!
போய் வருவேன் சில நாளில்!
என்னாவி உடலனைத்தும்
என்னினத்தின் வீடிவிற்காய்
முன்னமே அர்ப்பணித்தேன்!
"முடிந்தாலுன் கரம்பிடிப்பேன"

சொன்ன இவ்வார்த்தையிவை
சொல்லம் பாய்க்குத்திடினும்
அன்னை மொழிகாக்க
அல்லறும் இனங்காக்க
என்னினியர் தூயபணி
எல்லாம் உணர்ந்தவளாய்
அன்னார் அடிபணிந்தேன்
அவர் கரத்தில் முத்தமிட்டேன்!

"சென்று வருவீர்" எனச்
செங்குருதிப் பொட்டிட்டேன்!
சென்ற அவர் திரும்பவில்லை
செய்தியது கேட்டுழன்றேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றந்தப் பொங்கல் தினம்
அத்தானின் வீரதினம்!
என்றிந்தப் பெண்ணங்கு
இதயத்துள் நினைத்தழுழன்றாள்!

அழுதழுதவ் விளையாள்
அங்கோர் நினைவுடனே
எழுந்தாள் குழல் முடித்து
இருவிழியைத் தான் துடைத்தாள்!
பொழுது நல் புலர்கிறது!
பொன் வான் மிளிர்கிறது
தொழுதாளோர் கைவிளக்கைத்
தோகை கரமெடுத்தாள்!

ஒளி விளக்கைக் கையேந்தி
ஒவ்வொன்றாயடி பதித்து
தளிர்போல் மேனியது
தள்ளாடித் தள்ளாடி,
குளிர்வான் அரவணைக்கக்
கூடவே மனந்துடிக்க
அழியாதோ ருறங்கு மில்லம்
அவ்வீரர் நிலம் புகுந்தாள்!

வைத்தாள் தீபத்தை
விழி நீர் நிலம் பாய!
கைகூப்பிச் சிரந்தாழ்த்திக்
கண் மூடிச் சிலையானாள்!
வெய்யோ னிளங்கர த்தால்
வையந்தனையணைக்க
தைவாசம் பொங்கலுடன்
தாலாட்டிக் கொள்கிறது!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுமே பிடிக்கவில்லை

புத்தக மூடை தனை
முதுகில் சுமந்து நிதம்
செத்துப் பிழைத் துழலும்
சின்னஞ் சிறிசுகளாம்!

பள்ளிப் பாலகர் நாம்
பகரும் மொழிகேளீர்!
வெள்ளை உளமென்று
வேரோடு பறிக்கின்றீர்!

பள்ளிப் பாட மதில்
புள்ளிகள் குறைந்துவிடின்
பள்ளி ஆசான்கள்
தொல்லை பொறுப்பதில்லை

"முட்டாள்" பட்டமதை
முடி சூட்டி வைப்பார்கள்!
திட்டித் துலைப்பதுடன்
தலைகவிழ வைப்பார்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மரமண்டை" என்பார்கள்
"மக்கு" பட்டமதும்
தரமாகத் தருவார்கள்
தளிர் நாம் வாடிவிட!

அள்ளி அணைத்து விடும்
அம்மா அவர் கூட
புள்ளி குறைந்து விடில்
புறுபுறுப்புக் குறையாது!

என்னுடைய அப்பாவின்
இடியோசை வீடதிரும்!
என்ன நான் செய்வதுவாம்
ஒன்றுமே பிடிக்கவில்லை!

பள்ளியிலே நாள் முழுவதும்
படிப்பே எந்தனுக்கு
துள்ளி விளையாடத்
துளி கூட நேரமில்லை!

வீட்டிலகூட அங்கு
விளையாட வழியில்லை!
ஓட்டமும் நடையுமாய்
ஓடுவேன் ரியூசனுக்கு

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதல் ஒன்றுமின்றி
அனைத்தும் பரீட்சையிலே
தேறுதல் நோக்குடனே
தேடுங் கல்வியினால்

என்ன பலன் கண்டோம்
ஒன்றுமே பிடிக்கவில்லை!
சின்னக் குழந்தை நாம்
சித்திரை வதையெதற்கு!

விளையாட எந்தனுக்கு
விருப்பம் மனம் நிறைய
கறைபோடுங் கல்வியினால்
காற்றாய்ப் பறக்கின்றோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் நாள்

பஞ்சலிங்கம் நோய்கண்டு நொந்தார்
 பலமாதம் படுக்கையிலே வெந்தார்!
அஞ்சாது அவர் மனைவி செல்லம்
 ஆனமட்டும் செலவு செய்து பார்த்தாள்!
கொஞ்சமேனும் நோய் குறைய வில்லை
 கும்பிடாத தெய்வமே இல்லை!
எஞ்சியது நோய்மட்டுமங்கே
 இருவிழிகள் நீர்தோய நின்றாள்!

பரியாரி சிவசம்பு வந்தார்
 பஞ்சலிங்கம் கைநாடி பார்த்தார்!
"ஒரு நோயும் நாடியது இல்லை!
 ஒழுங்காக வேலை செய்யு" தென்றார்!
"கருமாரி தனைக்கேட்போ" மென்றார்!
 "கட்டாயம் மடைதேவை" யென்றார்
பெருவாரிச் செலவான மடையில்
 சிவசம்பு உருவேறி நின்றார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளியவர் மடைமுன்னால் ஆடி
   தூள் தூளாய் நிலமதிரச் செய்தார்!
அள்ளியவர் தண்ணீரை ஊற்ற
   அதில் முழுதாய்ப் பஞ்சலிங்கம் தோய்ந்தார்!
"கள்ளியே ஓடு நீ" என்றார்!
   "காடுனக்குச் சொந்தமடி" என்றார்!
தள்ளினார் சைகைபல செய்து
   தடியாலே அடித்தடித்து நின்றார்!

"கருமாரி" என்றங்கு சொல்லி
   கையினிலே சிறுகத்தி கொண்டு
ஒரு சோடி கோழியினை ஏற்று
   ஒவ்வொன்றாய்த் தலையறுத்து வைத்தார்!
திரு நீறு எறிந்தங்கு நின்றார்
   திக்கெட்டுங் குதித்தாடிக் கொண்டார்!
தெருவாசல் பக்கமவர் ஓடி
   "தூ, தூ, தூ ஓடு" எனச் சொன்னார்!

பூவள்ளி வீசியவர் கூவி
   "போ இங்கே நில்லாது" என்றார்!
ஆவென்று வாய் பிளந்து அங்கே
   அனைவருமே அசையாது நின்றார்!
நாயொன்று ஊளையிடுஞ் சத்தம்
   நடுச்சாமம் அவ்வேளை கேட்க
"பேயோடிப் போவதையே பார்த்துப்
   பெரிதாக நாயுளை இடுகிறது" என்றார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரியாரி துள்ளியவர் வீழ்ந்தார்!
   பலபேர்கள் கைத்தாங்கல் செய்தார்!
"கருமாரி காப்பாற்றி விட்டாள்
   கவலையொழி பஞ்சலிங்கம்" என்று
ஒரு நூலை எடுத்தங்கு நின்று
   ஒவ்வொன்றாய் மந்திரங்கள் ஓதி
பரியாரி சிவசம்பு அங்கே
   பஞ்சலிங்கம் கழுத்தினிலே இட்டார்!

"மூன்று நாள் தவணையதன் பின்பு
   மூவேழு வயதுடையன் ஆவாய்
வான் கொள்ளாச் சுகபோகங் கூடும்
   வஞ்சியவர் கெஞ்சிடவும் வாழ்வாய்"!
தேன் பாயச் சிவசம்பு சொன்னார்
   பரிசாகப் பணமுடை பெற்றார்!
மூன்றாம் நாள் நோய் முற்றிக் கொள்ள
   மூச்சிழுத்துப் பஞ்சலிங்கம் மாண்டார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூங்காற்றே பூங்காற்றே

பூங்காற்றே பூங்காற்றே
  பொய்கை தவழ் பூங்காற்றே
ஈங்கோர் சிறு பொழுது
  என்னுரையைக் கேட்பாயோ?
தூங்கும் நினைவுகளில்
  துயர் வெள்ளச்சுழிகளிலே
ஏங்கும் எம் நிலையை
  எம்மவர்க்கு உரையாயோ!

பூந்தாது குழைந்தாடி
  புன்னகைக்கும் பூங்காற்றே
காந்தள் விழியுடையான்
  கார் வண்ணன் தனை நாடி
நீந்திக் கரையடை யா(து)
  நீள் துயரில் தத்தளிக்கும்
மாந்தர் நாம் ஈழமதில்
  மாளும் நிலையுரைப்பாய்!

பத்துத் தலையுடையான்
  பார் போற்றும் இராவணனாம்
வித்தை பல தேர்ந்தோன்
  வீரத் திறனுடையோன்
முத்தாய்ப் பணிபுரிந்தோன்
  மேன்மைக்கலை பயின்றோன்
அத்தார் வேந்தனவன்
  அரசாண்ட ஈழமிது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கக் கடலலைகள்
வந்து நிதம் முத்தொதுக்கும்
தெங்கும் மலர்காவும்
தேன்பலா வாழைகளும்
எங்கும் கிளை பரப்பி
எழிலோச்சும் மாவினமும்
இங்கழகு கொஞ்சியெழ
இருந்தோச்சும் பூமியிது!

மத்தியிலே மஞ்சு தவழ்
மலையழகு இவை கொஞ்சி
சத்தியத்தின் குரலெழுப்பிச்
சதிராடும் மாநதிகள்!
எத்திசையும் பசுமையெழில்
இளங்காற்றின் இங்கிதங்கள்
கத்துங் குயிலோசை
கார்வண்ணன் இவையறிவான்!

வற்றாத மாவலியும்
வளமான கழனியதும்
கற்றையாய்ப் பூத்த பல
கண் பறிக்கும் பூவனமும்
நெற்பயிரின் கலகலப்பும்
நீண்ட பசுஞ் சோலைகளும்
அற்புதங்கள் இன்னுமுண்டு
ஆயிரமாய் அழகோச்சும்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெளிந்தோடும் அருவிகளாம்
நெஞ்சள்ளும் நீர்வீழ்ச்சி!
விளையும் பயிர் வளர்க்கும்
விரி குளங்கள் பற்பலவாம்!
மழை நாள் குறைந்ததில்லை!
மண்வளத்தில் பஞ்சமில்லை!
இளகும் நெஞ்சுடையார்
இன்னும் பலவுண்டு!

நாவற் குழியூரான்
நடராசன் கவிவளமும்
நாவலர் பெருமானின்
நல்ல உரைச் சித்திரமும்
பாவலர் விபுலானந்தன்
பைந்தமிழின் பல் வளமும்
மேவும் பல வளங்கள்
மென்மேலும் மிஞ்சியுள!

கன்னியா வெந்நீரெம்
களைப்பகல வைத்துவிடும்!
"இன்னும் வா" என்றழைக்கும்
இனிய நீர்த்தேக்கங்கள்!
பண்ணிசைத்து நதியோடும்
பார் என்று மான் ஓடும்!
கண்ணடித்து மயிலாடும்
கலைபயிலும் நாடிதுவாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றன் தேயிலைக்குக்
கச்சாய் மிளகாயும்
மட்டு நகர் தேன்வதைக்கு
மாத்தளையின் கொக்கோவும்
கொட்டியார நெல் மணிக்கு
கொழும்புப் பொருள்வகையும்
திட்டமுடன் கைமாறித்
திகழ்ந்த நிலை நீ யறிவாய்!

முன்பு இருந்த நிலை
முழுவதையும் நினைக்கிறேன்
வன்பு, வதை, கொடுமை
வஞ்சகங்கள் என்றிவைகள்
அன்று இருந்ததில்லை
அன்புப் பிணைப்போடு
ஒன்றாய் மலர்ந்திருந்தோம்
ஒரு கொடியின் மலர்களென!

புத்தபிரான் பொன்மேனி
பட்ட இப் பூ நிலத்தில்
சத்தியங்கள் தளைத்தோங்க
சான்றோர் பலரிருந்து
சுத்த நினைப்போடு
சுகம் வைத்த தடயங்கள்
எத்தனையோ உண்டிங்கு
இன்னுங்கேள் பூங்காற்றே!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களமும் செந்தமிழும்
   சேர்ந்து மகிழ்வோச்சி
திங்கள் ஒளி போன்று
   தித்திக்கத் தித்திக்க
மங்கள வின்னிசையில்
   மனங்குளிர வைத்ததெலாம்
எங்கள் மனம் வழியால்
   எண்ணி நான் பார்க்கின்றேன்!

ஆறு கடல் வழிகள்
   அத்தனையும் சுதந்திரமே
ஏறி இறங்குவதில்
   எவ்விடமும் தடையில்லை!
மாறிப் பல விடங்கள்
   மனதாரச் சுற்றிடலாம்
ஆறுதல் தான் எங்கெங்கும்
   அதையெண்ணிப் பார்க்கின்றேன்!

இரவிரவாய் எதுவுமின்றி
   எங்கெங்குஞ் சென்றிடலாம்
கரவின்றி பழகி நிதம்
   கடல் போன்று உதவி நின்றார்
சிறைகுறையுங் குஞ்சுகளாய்
   சேர்ந்து மகிழ்ந்திருந்தோம்!
உறவில் நனைந்திருந்தோம்
   உண்மை மால் தானறிவார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு இனம் நாங்கள்
நல்லுறவில் நாம் நனைந்து
தேன் வதையில் பூச்சிகளாய்
தேறிக் குதூகலித்தோம்!
ஊன் உணர்வு ஒன்றாகி
ஒரு குடியாய்ச் சேர்ந்தழகு
மேன்மையுற வாழ்ந்த நிலை
மெய் சிலிர்க்க எண்ணுகிறேன்!

கொள்ளை கொலை களவு
குண்டு வெடிச் சத்தங்கள்
எள்ளளவும் இருந்ததில்லை
என்றும் இனிமையுறத்
துள்ளித் திரிந்தோமே
துரோகச் செயலெதுவும்
நள்ளிரவில் கூட நாம்
நனைந்த கதை ஒன்று மிலை!

இனவெறிகள் இருந்ததில்லை
இரத்த வெறி கண்டதில்லை!
சினத்தின் வசப்பட்டுச்
சீரழிப்புக் கண்டதில்லை!
மனத்தால் பிணைப்புண்டோம்
மதவெறியில் தோய்ந்ததில்லை!
அனைத்தும் நிறைவு நிலை
இவை யுனக்கும் புதுமையிலை!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்குத் தெற்கென்ற
　வசைபாடக் கேட்டத்தில்லை
இடர்கள் எவை வரினும்
　எல்லோரும் தோள்கொடுத்தோம்!
படர் கொடியாய்ப் பாசமுடன்
　பண்பு இழையோட
இடம் வேறில்லையங்கு
　இருந்த நிலை எண்ணுகிறேன்!

ஒரு கொடியில் பூத்த மலர்
　உண்டிங்கு நான் மலர்கள்!
அருகருகே உண்டிவைகள்
　அன்பொழுகும் பௌத்த மதம்
கிருபை நிறைந்த உயர்
　கிறிஸ்தவமும் இஸ்லாமும்
அருளாம் இந்து மதம்
　அழகு மலர் இவையாகும்!

வாசங் குறைந் திடாத
　வண்ண மலர் இவைகள்!
பாசந் தனைக் காட்டிப்
　பயின்று வரும் மலரிவையாம்!
தேசம் எனுங் கொடிக்கு
　தனிப் பெருமை தரும் மலராம்
பேசாத பெருமைகளைப்
　பெற்றுயர்ந்த மலரிவைகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சம் மறந்திடாத
   நினைவலைகள் எத்தனையோ
கொஞ்சுஞ் சுவைஞுர் நாம்
   கொடியில் நாம் பூத்தமலர்!
வஞ்சகமும், பொய் பொறாமை
   வரட்டுக்குணம் இல்லா
நெஞ்சுப் பரிமாற்றம்
   நீண்டகதை இங்குண்டு!

கொழும்பு நகர் செல்வோம்
   கோச்சியிலே இரவுதனில்!
பொழுது விடிந்து விடும்
   போய்ச் சேரக் கொழும்பு நகர்!
பழுதின்றிச் சுற்றி இராப்
   பொழுதல்லாம் சுற்றிடலாம்!
கொழும்பு நகர் மக்கள்
   கொழுகொம்பாய் இருப்பார்கள்!

அப்புகாமி இல்ல மதில்
   அவலங்கள் நேர்ந்து விடின்
சுப்பிரமணியன் உளம்
   சோர்ந்து துடி துடிக்கும்
அப்பொழுதே சென்றங்கு
   அப்புகாமி அருகிருந்து
எப்பொழுதும் பிரிந்தகலா(து)
   எம் சுப்பன் பணிபுரிவான்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி நகர் சென்று
    கண்பறிக்கும் பெரகராவை
கண்டு மகிழ்வோம் நாம்
    "காமினி" உணவளிப்பான்!
அண்டை அயலவர்கள்
    அன்பால் அரவணைப்பார்!
இன்றைக்கும் நினைவலைகள்
    இழையோடிச் செல்கிறது!

சித்திரைப் புது வருடம்
    சிந்தித்துப் பார்கின்றேன்!
முத்துச் சிரிப் பெய்தி
    "முகமட் கரீம்" வருவான்
அத்தனையும் பல் தெரிய
    அந்தோனி முத்திருப்பான்!
இத்தனைக்கும் மத்தியிலே
    ஆரியும் அமர்ந்திருப்பான்!

உண்டு களித்திருந்தோம்
    உறவைப் பகிர்ந்திருந்தோம்!
கண்டு என் அம்மாவின்
    கண்கள் குளமாகும்!
பண்டைச் சிநேகிதங்கள்
    பாசக் கதையவைகள்!
இன்றைக்கும் நெஞ்சுதனை
    நிறையக் குடைகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சிப் பெரு நாளில்
  "கனிபா" எமையழைப்பான்
மச்சியவள் மனதார
  மலர்ந்த முகங்காட்டி
கச்சிதமாய் வரவேற்பாள்!
  கண்ணிறையும் மகிழ்வங்கு!
பச்சையாய் நினைவிருக்கு
  பார்க்கின்றேன் அவை திரும்பி!

இன்றிருக்கும் எங்கள் நிலை
  எண்ணிக் கலங்குகிறேன்!
அன்றையச் சிநேகிதங்கள்
  அத்தனையும் நோக்குகிறேன்!
ஒன்றேதோ குடைகிறது!
  என்னினிய பூங்காற்றே
இன்றெங்கள் அவலநிலை
  எடுத்தோத வேண்டும் நீ!

அழகுப் பதி பலவும்
  அத்தனையும் பாழாச்சு!
பழகித் திரிந்த மலர்
  பாசமலர் வெவ்வேறாய்
அழகு பொலிவிழந்து
  அகதிக் குடியானோம்!
தழுவும் தணற்புழுவாய்த்
  தத்தளிக்கும் நிலைகூறாய்!

ஆலையூரான் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிதாய் இருந்த குடி
இதயத்தால் கலந்தகுடி
கனிவும், நிறைவுகளும்
கலந்தொன்றாய் வாழ்ந்தகுடி
மனிதம் மேலோங்க
மண்ணில் மகிழ்ந்த குடி
அனியாயப் போர் முரசால்
அழிந்தொழியும் நிலை கூறாய்!

எழுபதுகள் முன்பிருந்து
இன்று வரை நாமிங்கு
அழுது புலம்புதல்கள்
அத்தனையும் ஓயவில்லை!
விழுது போல் காலூன்றி
வாழ்ந்த குடியெமக்கு
பழுது வந்ததிந்தப்
பரிதாபம் நீயுரைப்பாய்!

பஞ்சம் பசி வேறு
பாலகர்கள் நோய்வேறு!
அஞ்சும் சா வேறு
அலையும் நடைவேறு!
நெஞ்சில் முள் வேறு
நேர்மைக்குத் தடைவேறு
எஞ்சியென்ன வேறுண்டு?
இயம்பாயெம் இளங்காற்றே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுதனை இழந்து
    வேதனையே மிச்சமென
ஓடாய் உருக்குலைந்து
    உள்ளாவி செத்தநிலை!
காடு கரம்புகளில்
    கல், முள்ளுப் பாறைகளில்
தேடு வாரற்றலையும்
    தெருநாய்க்குச் சமனானோம்!

இவளொருத்தி தாயிழந்தாள்
    இனிய இவள் மகனிழந்தாள்!
அவளோ பதியிழந்தாள்!
    அந்தோபார் அவ்விளையாள்
துவளுங் கொடியனையாள்
    துணையண்ணன் தனையிழந்தாள்!
அவலம் வாழ்வெல்லாம்
    அத்தனையுங் கூறாய் நீ

கட்டிய வீடழித்தார்!
    கன்று, பசு தானழித்தார்!
தொட்டில் குழந்தைகளைத்
    தொண்டை நெரித்தழித்தார்!
உட்பகையால் இப்பூமி
    உருக்குலைந்து மாய்கிறது!
வெட்கம் இதை நினைக்க
    வேதனைகள் கூறாய் நீ

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதோரம் அழுகுரல்கள்
கண்ணோரம் விரிதலைகள்
ஈதென்ன கொடுமை நிதம்
இதயங்கள் வெடிக்கிறதே!
தீயின் கொழுந்தெழுந்து
தீ விதனைத் தீய்க்கிறதே!
போதும் இனித்துயரம்
பூவண்ணன் செவியுரைப்பாய்!

அங்கேபார் தீப்பொறிகள்
அனல் கக்கும் அழிவுகளை!
எங்கும் அழுகுரல்கள்
ஐயோ எனும் ஓலம்!
இங்கிவைகள் கண்டாய் நீ
இரக்கம் கொண்டிலையோ....?
அங்கெம் மாலவர்க்கு
அத்தனையும் கூறாய் நீ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடை கொடுத்தாள்

வன்னியிலே ஒரு வஞ்சி
வடிவழகி பெயர் வதனா,
கண்ணழகைக் கயல் காணின்
கண்கலங்கித் தலை குனியும்!
தென்னவர் தம் தமிழ் போன்று
தேன்சொரியும் பேச்சழகி
சின்ன இடை மெல்லியலாள்!
செவ்வரத்தம் பூவிதழாள்!

வஞ்சியவள் முகங்காணின்
வட்ட நிலா முகங்கோணும்!
நெஞ்சந்தனை அலைக்கும்
நீண்ட இவள் குழல் அழகு!
வெஞ்சமரர் வாள் போன்று
விளங்கும் அழகு விழி!
அஞ்சா இளஞ்சிட்டு!
இவள் வன்னி இதயமலர்!

ஆடித் திரிவாளவ்
வழகொளிரும் பூ நிலத்தில்!
பாடித் திரிவாளப்
பாவை பூஞ் சிட்டாக,
கூடித்தன் தோழியர் தம்
துணையோடு கலகலப்பாள்!
சூடிப்பல மலர்கள்
சுற்றிக் களி கொள்வாள்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர் கூதல் காற்றசைக்கும்
குடில் வாழ்வாளி வளௌனினும்,
தளிர் அன்ன மென் கரத்தால்
தன்னிளமைத் துடிப்போடு
ஒளி சிந்துங் குளிர் மதியாய்
ஓடோடி உதவிகளை
இளையாளிப் பூங்கோதை
இரவு பகல் என்றளிப்பாள்!

ஆங்காங்கே வானூர்தி
அழித்தொழிக்கும் வன்னியிலே,
தூங்காது கண்விழித்துத்
துயர் பிடித்த வேளையிலும்
ஆங்கிவளோ சோர்வறியாள்!
அழகொளிரும் வார்த்தைகளால்
மாங்குயில் போல் பாட்டிசைத்து
மனங்கோணா துதவிடுவாள்!

அஞ்சா இளங்கோதை
அழகு மலர் வதனாவின்
கஞ்சமலர்ப் பாதங்கள்
கல் முள்ளுக் காடுகளில்
அஞ்சாது முன்னேறும்!
அங்குள்ளோர் தமக்கெல்லாம்
நெஞ்சம் மகிழ்விக்கும்!
நிழல் போன்று உதவிவிடும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டு வெடிச்சத்தங்கள்
குடிசை, மனை அழிப்புக்கள்,
பண்டை இருப்பிடங்கள்
பறிபோன நிலைகள் பல
பெண்டிர் இளம்பிஞ்சுகளும்
பெரும் பீதி பெற்ற நிலை!
கண்டு அவ் விடமெல்லாம்
காரிகையாள் கரங்கொடுப்பாள்!

இத்தனைக்கும் மத்தியிலும்
இவ்விளைய பூங்கொடியாள்
நித்தம் ஒரு நினைப்பதனை
நெஞ்சத்தில் கொண்டிருந்தாள்!
அத்தான் அவள் ஆருயிரான்
அஞ்சான் அடிபணியான்
"முத்தையன்" பெயர் அன்னாள்
மனதில் குடியிருந்தான்!

முத்தையன் வன்னிதனில்
முழுதாய்க் கலை பயின்றோன்!
எத்தனையோ களங்கண்ட
இனிய இளங்காளையவன்!
இத்தனையோ டவனுக்கு
இருபத்தி யாறகவு!
மொத்தத்தில் அவன் வாழ்க்கை
முழுதும் பொதுப்பணிதான்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து வருடங்கள்
இவளின் இதயத்தில்
இந்த இளங்காளை
இன்பக் குடியிருந்தான்!
எந்தச் செயல்களிலும்
இவனின் நினைப்போடே
இந்த இளங்கோதை
இருந்து செயற்பட்டாள்!

அழகான செம்மாலை,
அந்திவான் சிவப்புதிர்க்க
இளையாள் இப்பூவிழியாள்
இருந்து தனக்குள்ளே
சுளையான நினைப்புகளில்
சுகங்கண்டு கொள்ளுகிறாள்!
அழையா நினைப்பலைகள்
அர்த்தங்கள் கோடிபெறும்!

"புத்தாயிரம் ஆண்டதனில்
பிறக்குந்தைத் திருநாளில்
மத்தளங்கள் கொட்ட எம்
வன்னியர் தம் முரசொலிக்க
குத்து விளக்கொளிர
குங்குமத்தால் திலகமிட்டு
"அத்தான் கரமணைவேன்"
அவள் நினைவு தொடர்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முற்றத்தில் மேடையிட்டு
முக்கனிகள், சர்க்கரையில்
அற்புதமாய்ப் பொங்கலிடும்
ஆரவார நிகழ்வூடே
கர்ப்பூர மணங்கமழும்
கதிர் ஆடும் இத்தையில்
சிற்றாடைக் கன்னியெந்தன்
சிந்தை நிறையு" மென்றாள்!

"உற்றார் உறவினர்கள்
உடன் சேர்ந்த ஊர்வலத்தில்
முற்றத்து மல்லிகையின்
மலர் மாலை தோளசைய
அற்புதமாய் அத்தானிங்
கழகாய்க் கரம்பிடிப்பார்!"
பற்பலவாய் எண்ணுகிறாள்!
பசுமை நினைவூடே!

இவ்வேளை அவ்விடத்தே
அதிசயங்கள் நிகழ்கிறது!
செவ்வான் பரப்பங்கு
சிறிதாய்க் கலைந்திட்டு
அவ்வான் பரப்பதனில்
அழகு நிலா முகங்காட்ட
ஒவ்வொரு கணப்பொழுதும்
ஒவ்வொன்று நிகழ்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவனை நினைத்தங்கு
   இவ்விளையாள் ஏங்கினளோ
அவனே முன்தோன்றி
   அழகோச்சி நிற்கின்றான்!
இவனா என்னத்தான்?
   இத்தனைக்குள் வந்துற்றார்!
இவளங் கதிசயித்து
   ஏங்கி நிலம் பார்த்தாள்!

"அத்தானென்" றாளவ்
   வழகு இள மயிலாள்!
எத்தனையோ நினைவலைகள்
   என்னை அலைத்தலைக்க
எத்தனை நாள் பொறுத்திருப்பேன்
   இத்தையும் என்ன நிலை.....?
முத்தையன் முறுவலித்து
   மங்கைபாலிவை யுரைத்தான்!

"தொட்டபணி இன்னும்
   தொடரும் நிலை அறிவாய்!
பட்ட துயர், அவலம்
   பலநூறு, தீர்ந்ததுவா?
அட்டைபோல எம் குருதி
   அனைத்துங் குடிக்கின்றார்!
திட்டம் எமையழிக்கத்
   தினந்தோறுந் தீட்டுகின்றார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த மண்ணில் எம்
  சுதந்திரங்கள் பறிபோச்சு!
வெந்த புண்ணில் கூர்
  வேல் பாய்ச்சி நிற்பது போல்
அந்தோ! துயர் ஒன்றா?
  அள விடத்தான் முடிகிறதா?
இந்தக் கணங்கூட
  எத்தனையோ பணியுண்டு!

"பஞ்சம், பசி, நோய்கள்
  பல செல் தாக்குதல்கள்,
வெஞ்சமரால் எம்வன்னி
  வெறிச்சோடிக் கிடக்கின்றது!
அஞ்சுவதால் பயனில்லை!
  அஞ்சி நாம் வாழ்ந்ததில்லை!
கொஞ்சம் பொறு வதனா!
  கொடுங்கோல் அழித்தொழிப்போம்"

"தாயகத்தில் நம் தலைமை
  தவறாது தளைத்தோங்கும்!
ஓயாது எம்பணிகள்!
  ஒன்றாய்த் திரண்டெழுந்து
ஆயுதங்கள் இல்லாத
  அறப்போர் திரண்டெழுந்து
தாயகத்தை மீட்டிங்கு
  தருவோம் சுதந்திரத்தை!"

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மறக்குலத்தில் பிறந்துற்ற
மாவீரப் பெண் உனது
திறன் அதனை நானறிவேன்
தருவாய் விடை எனக்கு!
புறப்பட்டுப் போய் எமது
பூமி மீட்டெடுக்க
பொறுப்பாய் சில நாட்கள்!
போய் முடித்துக் கைப்பிடிப்பேன்"

என்றுரைத்து முத்தையன்
இவ்விளையாள் தன்னிடத்தே
அன்றே விடை கேட்டான்!
அவ்விளைய பூங்கொடியும்
"சென்றுங்கள் பணிமுடித்துச்
சீக்கிரத்தில் திரும்புங்கள்!
என்றும் நான் காத்திருப்பேன்!"
இனிதாய் விடை கொடுத்தாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுதி கொள்

எழுதி வாழ்தல் வேண்டும்
எண்ணித் துணிதல் வேண்டும்!
பொழுது நன்கு பேணில்
பொலியும் மேன்மை நாளும்!
அழுது புலம்பும் வாழ்வில்
ஆண்மை குறைந்து போகும்!
எழுக! எண்ணம் விரித்து
என்றும் வாழப் பழகு!

ஆட்டம் போடும் உலகம்
ஆரவாரம் மிகவாம்!
கூட்டங் கூடிக் குலையும்
கொள்கை சிதறி யழியும்!
தேட்ட மெதிலும் வேண்டும்!
தெரிந்து கூடல் வேண்டும்
ஏட்டிலுள்ள நீதி
எங்குஞ் செறிதல் வேண்டும்!

உண்மை தேர்ந்து நாளும்
உழைத்து வாழ்தல் வேண்டும்!
எண்ணஞ் சிறத்தல் வேண்டும்!
எழில்கள் கொஞ்சவேண்டும்!
"என்னால் முடியும்" என்றே
என்றுமுழைத்தல் வேண்டும்!
முன்னால் காலை வைத்து
முயன்று வாழ்தல் வேண்டும்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சமடைதல் கீழ்மை
  தளராதுழைத்தல் மேன்மை!
கஞ்சல் கூட உதவும்
  கடமை கண்ணின் மேலாம்!
மிஞ்சில் பாலும் புளிக்கும்!
  மேடும் ஓர்கால் உதவும்!
அஞ்சில் எதற்கு வாழ்க்கை
  அழிந்தே போகுமுண்மை!

கூட்டத்தோடு வாழு
  கொள்கையதிலே போடு!
நாட்டுக்காக நாளும்
  நல்ல திட்டந் தேடு
வீட்டை மறந்திடாதே
  வெல்லும் வழிகள் பாரு!
தேட்டமெங்கு உண்டோ
  தெரிந்து தேடிக் கொள்ளு!

அலைகள் போல நெஞ்சை
  அலைத்து வாழ்தல் வேண்டாம்!
தலைமை ஏற்றுப் பழகு
  தகைமை சேர்த்துக் கொள்ளு!
மலைகள் போல துயரம்
  வந்து ஆட்டி வைக்கும்
நிலைகள் தளரவேண்டாம்
  நெஞ்சில் உறுதி கொள்ளு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சிக் கோலங்கள்

நாற்று நடுகையின் போதும் - தண்ணீரில்
நனைந்து மகிழ்ந்திடும் போதும்
சேற்றில் கால்களை ஊன்றி - நான்
சேர்த்து மிதித்திடும் போதும்
ஆற்றில் அழகுற மூழ்கி - சின்னஞ்சிறு
அலைகள் எழுப்பிடும் போதும்,
காற்றில் நெல்மணியாங்கே - அழகாய்க்
கலகலத்தாடிடும் போதும்,

உன்முகம் காண்பது அன்றி - வேறு
ஓருரு காண்பது இல்லை!
என்ன அதிசயம் ஏடி - உன்னால்
இங்கு நிகழ்வது எல்லாம்!
கண்ணைப் பறித்திட்டு நிற்பாய் - பல
காட்சிக் கோலங்கள் செய்வாய்!
உன்னால் நிகழ்வன கோடி - அடி
உன்செயல் அற்புதம் ஆகும்!

சின்னக் குழந்தையாய் வந்து - என்னை நீ
சேர்த்து மகிழ்வது போன்றும்,
கன்னம் உரசியே நின்று - பல
கதைகள் சொல்வது போன்றும்
வண்ணப் புதுச் சேலை கட்டி - என்னை நீ
வாரி எடுப்பது போன்றும்
கண்ணில் நிறைந்து நீ நிற்பாய் - பல
காட்சிக் கோலங்கள் செய்வாய்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றங் கரைதனில் நின்று - தண்ணீரை
அள்ளித் தெளிப்பது போன்றும்
சேற்றினை அள்ளி நீ வீசி - பல
சேட்டைகள் செய்வது போன்றும்
காற்றுடன் காற்றாக வந்து - என்னைக்
கட்டித் தழுவுதல் போன்றும்
போற்றும் புதுக்கவி தன்னில் - அழகு
புன்னகை செய்வது போன்றும்,

கன்னஞ் சிவந்திட நிற்பாய் - உந்தன்
கண்ணால் மோடிகள் செய்வாய்!
உன்கால் பெருவிரல் கொண்டு - நிலம்
உராசிக் கோலங்கள் செய்வாய்!
சின்ன இடையது நோவ - சில
சேட்டைகள் செய்து நீ செல்வாய்!
என்னுள் நிறைந்தவள் நீதான் - உன்னை
என்னால் இழந்திட ஏலா (து)

எங்கு நோக்கினும் நீதான் - மனம்
எண்ணி மகிழ்வதும் நீதான்!
செங்கதிர் வீசிடும் மாலை - இளம்
செய்திகள் சொல்லிடுங்காலை
திங்கள் தழுவிய குன்று - அழகு
தேன்சொரி பூவனமென்று
அங்கெலாம் உன்னுரு அன்றி - வேறு
ஆனது ஒன்றுமே இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது எங்கள் மண்

பச்சைக் கோலம் எங்கெங்கும் - அங்கே
பரந்து காணும் மலைக்காட்சி!
இச்சை தந்திடும் பூங்காக்கள் - உயர்
இனிய தேயிலைத் தோப்புக்கள்!
குச்சுக்குடிசை, மண்வாசம் - உடன்
குவிந்து வாழுந் தொழிலாளர்!
கொச்சையிலாத எழில் காட்சி - எங்கும்
குளிரச் செய்யும் நீர்விழ்ச்சி!

இந்த இனிய மண்ணில்தான் - அங்கே
"இந்துமதி" யெனும் பெண்ணிருந்தாள்!
இந்தமதி இம்மலையகத்தின் - கூடை
என்றும் ஏந்தித் தளிர்கொய்வாள்!
அந்தோ! கல், முள் அனைத்திலுமே - அவள்
அழகாய்த் துள்ளி நடை பயில்வாள்!
பொந்தாய்க் காணும் "லயம்" ஒன்றில் - சிறு
பொழுதே கழிப்பாள் ஓய்வென்று!

சொல்வாள் இந்த இந்துமதி "நாம்
சுதந்திர மாயிம் மலையகத்தில்
நல்லாய் மகிழ்ந்து வாழ்ந்திடனும் - இது
நமது மண்ணென்று நனைந்திடனும்
இல்லை இதுபோல் இங்கிதங்கள் - எம்
இனிய எங்கள் மண் இதுதான்"
சொல்லில் வடிக்க முடியாது - இந்தின்
சுதந்திர உணர்வுத் தாகமதை!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைக்கும் வர்க்கம் உருக்குலைந்து - துண்டு
இடந்தனும் இல்லா ஏழ்மையுடன்
தழைக்கத் தழைக்க வெட்டி விடும் - ஒரு
தாவரம் போல வாழ்வோச்சி,
களைத்துக் களைத்துக் கவலையுடன் - அங்கே
கண்ணீர் வாழ்வு நாளெல்லாம்!
இளைத்த இனத்தின் நிலைகண்டு - அங்கே
இந்து எழுந்தாள் உணர்வுடனே!

பேரணி யொன்றைக் கூட்டியங்கே - இந்து
பேசி நின்றாள் உணர்வுடனே!
"நாராய் உரித்து எமையழித்தார் - சொறி
நாயாய் எம்மை நினைத்து விட்டார்!
வேரோடு சாய்த்திட எமையிங்கு - பல
வெறியாட்ட நிகழ்வுகள் காணுகின்றோம்!
போராட்டம் ஒன்றே வழி இதற்கு - நாம்
போவோம் களம்" என முன்நின்றாள்!

முதுகில் கூடை முக்காடுடன் - இந்து
முன்னால் நடந்தாள் அதன் பின்னே
அதிரடிப் படைபோல் இளமாதர்-பின்னால்
அணியணியாகச் செல்கின்றார்!
"இது எமதினிய மண்ணென்றார் - இது
எங்கள் உயிர்க்குச் சமனென்றார்!
உதிரஞ் சிந்தும் நிலை வரினும் - நாம்
ஓயோம்" என்றே குரலொலித்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குந்தத் துண்டு நிலமில்லை - லயம்
குடிசை வாழ்வே நாளெல்லாம்!
அந்தோ! வெய்யில், மழை, பனியில் - நாம்
அழிந்து கொண்டே உழைக்கின்றோம்!
வெந்து, மாய்ந்தும் என்ன பலன்...? - எம்மை
விலையாய் விற்றுப் பிழைக்கின்றார்!
சந்ததி, சந்ததி இது போன்று - பல
சரித்திரம் படைத்தது இனிப்போதும்!"

"கத்திக், குழறி நின்றாலும் - இங்கு
காதில் ஏற்கார் துரைமார்கள்!
குத்தி வெட்டும் இனவெறியர் - எம்மைக்
குலைக்க நினைக்கும் சதிகாரார்!
எத்தனை வருடங்கள்...! பொறுமைக்கும் - ஒரு
எல்லையுண்டு இனிமுடியா(து)!
சத்திய வழியில் போர்தொடுப்போம்" - எனச்
சொல்லி எழுந்தது இந்து அணி!

இந்து சொன்னாள் உறுதியுடன் - "நாம்
எங்கள் உரிமை வென்றெடுப்போம்!
ஐந்நூறு ரூபா சம்பளத்தில் - எமக்கு
அதிகரித்துத் தரல் வேண்டும்!
சொந்தமாக நிலம் வேண்டும் - அதில்
சுதந்திரமாக வாழ்வோச்ச
அந்த நிலத்தில் ஓர் இல்லம் - அங்கே
அரசு கட்டித் தர வேண்டும்!"

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தியச் சாதி என்றெம்மை - இங்கு
ஏன் பிரித்திகழ்ச்சி தரவேண்டும்!
இந்த மண்ணில் வாழ்ந்து வரும் - நாம்
எல்லோரும் இலங்கைச் சாதியன்றோ!
இந்த அழிவுப் பிரிவுகளை - நாம்
இன்றே வேரோடு களைய வேண்டும்!
இந்த வான், மண் எல்லாமே - இங்கு
எங்கள் சொத்து நிலை வேண்டும்!"

"நல்ல கல்வி இருக்கிறதா? - எமக்கு
நல்ல ஆசான்கள் இங்குண்டா"
"இல்லை இல்லை" என ஒன்றாய் - அங்கே
எங்கும் ஒலிகள் கிளம்பியது!
கல்வியற்றோர் கண்ணற்றோர் - ஆம்
நமக்குக் கண்கள் ஒன்றுமில்லை"
துல்லியமாக இதை இந்து - அங்கே
துக்கம் மேலிடக் கூறிவைத்தாள்!

"எங்கள் அழகு மலையகமே - எமை
என்றும் வருடும் மலைக்காற்றே!
எங்கள் நிலையைப் பார்த்தாயா? - இங்கு
என்ன பாவம் செய்தோம் நாம்?
இங்கு விடிந்தும் விடியாத - இனிய
இளைய காலைப் பொழுதேகி
தொங்கு தொங்கென ஓட்டமுடன் - நாம்
தொழிலில் தோய்ந்து கொள்வோமே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன பலனைக் கண்டோம் நாம்? - இங்கு
இதுவரை பொறுத்துப் பார்த்தாச்சு!
சொன்ன இந்த அழுத்தங்கள் - நாம்
வெல்லும் வரைக்கும் மூச்சாக
என்ன வதைப்புச் செய்தாலும் - எமை
வெட்டி வீழ்த்திக் கொன்றாலும்
ஒண்ணாய்ச் சத்தியஞ் செய்கின்றோம் - நாம்
ஒருவரும் கொழுந்து பறிப்பதில்லை"

"ஓமோம்" என்றே ஒப்புதலாய் - அங்கே
ஒலித்தன வான்வரை கரகோசம்!
தேமா வடுப் போல் கண்ணழகி - இந்து
தெளிவாய் மேலும் உரை செய்தாள்!
"நாமிங் கொன்றாய் அணிதிரள்வோம் - இங்கு
நமக்குள் உறுதியை எடுத்துரைப்போம்!
கோமான் சிவனு இலட்சுமணன் - அவர்
கொள்கைகள் மீது சத்தியங்கள்"

"ஓயமாட்டோம்" இந்தொலித்தாள் - ஆம்
"ஓயமாட்டோம்" ஒலித்தன குரல்கள்!
ஆயுதம் இல்லாப் பேரணியாம் - அங்கே
அனல் பொறி தெளித்தன கண்பறித்து!
காயுதலறியா இளமாதர் - அவரின்
கரகோசம் வானைக் கலக்கியது!
சாயுதல் அறியா இந்துமதி - அவள்
சரித்திரம் படைத்து நிற்கின்றாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைவார் குழலார் குரலங்கு - மலை
வாசம் உந்த ஒலிந்தனவாம்!
"உய்வோம் இன்றேல் உயிரழிப்போம் - எம்
உரிமை ஒன்றே எம்மூச்சு!
கைவிலங்கின்றே அறுத்தொழிப்போம்" - அங்கே
கரகோசம் வானை முட்டியது!
எய்த அம்பாய் வீச்சோடு - அங்கே
எங்கள் மலையகம் எங்கும் பார்!

"செய்வோம் இன்றே செய்வோம் நாம் - இன்றேல்
செத்து மடிவோம் இன்றே நாம்!
வை, வை எமது உரிமைகளை - எம்மை
வாட்டி வதைத்தது போதும் நீ"
பொய்யாம் இடையாள் இந்துமதி - அங்கே
புகன்று முன்னால் செல்கின்றாள்!
ஐயா" சிவனு இலட்சுமணன் - நினைவில்
அங்கே எழிச்சிப் படைகாணீர்!

கையில் ஒரு பிடி மண்ணெடுத்தாள் - இந்து
கண்ணில் ஒற்றிக் கொள்ளுகிறாள்!
கொய்யா மலர் கொள் குறிஞ்சி நிலம் - எங்கள்
குலத்தின் தாய்மைச் சொத்தென்றாள்!
பொய்யா (து) எங்கள் போராட்டம் - இனிப்
பொங்கும், பொங்கும் என்றுரைத்தாள்!
கையில் கொடிகள், கரகோசம்! - அங்கே
கால்பதித் தூர்வலம் செல்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருப்பேன்

கன்னல் சுவை போன்று - என்னைக்
கவர்திழுக்கும் உன்பேச்சு!
இன்னும் பார் என்றழைக்கும் - உன்
இனிய முக பாவனைகள்!

சின்ன இடையழகும் - உன்
சிங்காரச் சிரிப்பழகும்
தென்னுன் தமிழ் தெரிந்து - நீ
தென்பூட்டுஞ் சொல்லழகும்.

நெற்றிப் புருவமிடை - அங்கு
நீந்துகின்ற பொட்டழகும்
கற்றைக் குழல் அழகும் - என்
கற்பனைக்கு வித்தாகும்!

விண்ணின் மதிதோற்கும் - உன்
வதனம் இது காணில்!
கன்னந் தருமழகில் - இனிய
கவிதை வளம் பிறக்கும்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னம் நடைசோரும் - உன்
அழகு நடை காணில்!
பொன்னி நிறம் காணும் - உன்
பொலியும் உடல் காணில்!

பூப்போன்ற உன் இதழ்கள் - என்னைப்
பூரிப்பில் ஆழ்த்திவிடும்!
பார்ப்பாய் அப்பார்வையிலே - ஆயிரம்
பாபுனையுந் திறன் கூடும்!

அன்பின் தனிப்பார்வை - உன்
அழகு விழிக்கோலங்கள்!
துன்பந் தனையகற்றும் - உன்
தரிசனங்கள் ஒவ்வொன்றும்!

இன்னுங்கேள் என்றுரைக்கும் - உன்
இனிய தமிழ் வார்த்தைகளாம்!
இன்னும் பார் என்றணைக்கும் - உன்
இனியபுன் முறுவல்களாம்!

துன்பச் சுமையென்னை - மிகத்
துயரத்துள் ஆழ்த்துகையில்
அன்பாய் எனை அனுகி - இனிய
ஆறுதல்கள் சொல்வதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்பூட்டி வைப்பாய் - அதில்
    தீந்தமிழின் சுவை காண்பேன்!
உன்பால் உள இனிமை - என்
    உள்ளம் நிறைந்திடுமே!

அன்பொழுகும் வழிபார்த்து - நான்
    ஆயிரமாய்க் கதைபடிப்பேன்!
உன்புருவ அசைவினிலே - இனிய
    உருப்படியாய்க் கவி வளரும்!

நீ இனிமை உன் மொழிகள் - அவை
    அத்தனையுந் தானினிமை!
நானுனது துணையணைய - வரும்
    மறுபிறவி காத்திருப்பேன்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவேந்தன் பாரதிதாசன்

கனக சுப்புரத்தினம் - இவன்
கவியால் உலகைக்
கலக்கி விட்ட
கடும் புயலோன்!

அமிழ்தென்றான் தமிழை!
அதில், உயிரை வைத்தவனாய்
கனல் பறக்கக் கவியார்த்து
காவியங்கள் படைத்து விட்ட
கவி மன்னன்!

புதுவையிலே பிறந்து விட்ட
புரட்சிகவி! கவியால்
புதுமை பல தந்துவிட்ட
புலவர் கோன்!

சாக்கடையில் கிடந்துழன்ற
தமிழர் வாழ்வை,
பூக்கடைபோல் ஆக்கிவிட்ட
புதுமைக் கவி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மானத் தமிழனிவன்!
தமிழைப் படித்ததனால்
மெத்தத் தலைக் கிறுக்கோன்!
இவனின் கவியால்
விறுவிறுப்புத் துள்ளியெழும்!
படித்தவர் பால்
சுறுசுறுப்பைச் சீண்டி விடும்!
விடுதலைக்குத் தூபமிடும்!
விறல், வீரம் விளைத்து நிற்கும்!

தமிழைப் பழித்தவரைச்
சாக்கடைக்குள் தள்ளியவன்!
இமையாது இருந்தென்றும்
இழிவைப் பொசுக்கியவன்!

பாரதியால் "எழுக புலவன்" என
எழில் ஆசி பெற்றுக் கொண்டு
"பாரதிதாச" னாகி
பைந்தமிழை வடித்த கவி!

வேல் போல் பகைவர்களை
வேரறுக்கும் இவன் கவிகள்!
கட்டுக் குலையாத கொள்கையுடன்
கவியுலகில்
சிட்டுக் குருவியதாய்
சிறகடித்துப் பறந்தகவி!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகச் சீர்கேடுகளை
சாதிக் கொடுமைகளை
அமுதக் கவிவடித்து
அழித் தொழித்த
அருங்கவிஞன்!

கொஞ்சமேனும் அஞ்சாத
நெஞ்சுடையோன்!
பஞ்சம், பசி பழகிவிட்ட
பாட்டாளி வர்க்கத்தைக்
கூட்டாளி ஆக்கியவன்!

பாட்டெடுத்து அதன் வழியாய்ப்
பாய்ந்தால் புலி ஆவான்!
கூட்டத்தில் இழிவுகைளக்
கூட்டோடே பொசுக்கியவன்!

சுயமரியாதை இயக்க மூடே
சமபந்தி போசனத்தில் - தன்கரத்தைப்
பயமின்றிப் பதித்து விட்ட
பைந்தமிழன்!

பெரியார் அவர் பால்
பயபக்தி கொண்டெழுந்தோன்!
"புரட்சிகவி" அதனூடே
போர் முழங்கஞ் செய்தகவி!
அழகின் சிரிப் பெடுத்து
அழகுக் கலை படைத்தோன்!
பாண்டியன் பரிசளித்துப்
பைந்தமிழின் சுவையளித்தோன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பனரின் பயித்தியச்
செயல் கண்டு
ஆர்ப் பரித்து அன்னாரை
அடக்கி முடக்கியவன்!
ஆரியம் என்றங்கு
வீரியம் பேசியோரை
கவிதைத் தேரினில்கட்டி
தெருத் தெருவாய்
இழுத்த கவி!

ஆதனம் இல்லாதோர்க்கு
ஆதரவாய் இருந்துகொண்டு
சீதனக் கொடுமைகளைச்
சீறி மிதித்த கவி!

விதவைக் குலம் வாழ
வெல்லும் வழி சொன்னான்
அன்னாரை
"வட்ட நிலா" என்றான்!
"வேரதனில்
பழுத்த பலா"என்றுரைத்தான்!

பாவுலகில் வேந்தனாகி
"பாவேந்தன்" எனப் புகழைப்
பாரினிலே பெற்றதுடன்
சாகா வரங்கொண்டான்
நல்லறிஞர்
சரித்திரத்தில் இடம் பெற்றான்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடம் மலருமா

கந்தசாமி என்றொரு - இனிய
கவிஞன் இங்கு சொல்கிறான்
"எந்தன் மனைவி சரஸ்வதி - கடந்த
ஏழு வருடம் தனதவள்
சொந்த நினைவு இழந்திட்டு - மூலை
சுருண்டு வாழ்வு கொள்கிறாள்!
எந்த நாளும் வேதனை - இவளை
எண்ணி எண்ணித் தவிக்கிறேன்!

ஏழு வருடம் முன்னாலே - சற்று
எண்ணிப் பார்த்துக் கொள்கிறேன்
வாழைக் குருத்துப் போலவே - மென்மை
வார்த்த அழகு கொண்டவள்
பாளைச் சிரிப்பு உதிர்ப்பவள் - பேச்சு
பைந்தமிழாய் இனித்திடும்!
நீளழகு விழிகளால் - எந்தன்
நெஞ்சையள்ளிக் கொள்ளுவாள்!

"சரசு" என்பேன் செல்லமாய் - அந்தச்
சந்தனத்துப் பெட்டகம்
உரசி வந்து என்னிடம் - அத்தான்
என்ன? என்று அணையுவாள்!
அரவணைத்துக் கொள்ளுவான் - அதில்
ஆழ்ந்த இன்பங்கொள்ளுவாள்!
இரவு பகலின்றியே - எங்கள்
இனிய வாழ்வு கழிந்திடும்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையொன்று பெற்றிட்டு - அதைக்
 கொஞ்சிக் கொஞ்சிக் வளர்த்ததை
அழகு தமிழில் சொல்லிட - எனக்கு
 ஆனவார்த்தை ஒன்றிலை!
வழமை போல ஊரினில் - பலதாய்
 வதந்தி வந்து சேர்ந்தன!
அழுத குரல், அவலங்கள் - ஊரில்
 ஆங்காங்கே கேட்டன!

நானும் சரசும் ஏங்கினோம் - எங்கள்
 இளசும் அழுது வடித்தது!
வானோ வெடியிலதிர்ந்தது - சிலர்
 வந்தார் கொலை வாள்கையுடன்
மானாய் வெருண்டு சரசவள் - அங்கு
 மயங்கிச்சோர எனையவர்
ஊனே உருக உதைத்தனர் - அங்கு
 ஒன்றுஞ் சொல்லா(து) வதைத்தனர்.

எனக்கு முன்னால் சரசினை - அன்னார்
 எல்லாஞ் செய்து முடித்தனர்!
தனக்கு நேர்ந்த கதியினால் - எந்தன்
 தாங்கம் இன்று மூலையில்
கனக்குந் துயரச் சுமையினை - கவி
 கந்தசாமி உரைத்திட்டான்!
மனக் கவலையழித் திட்டு - நல்ல
 மானிட மெப்போ(து) மலர்வது?

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகைப் பார்

முத்துப்போல் நெல்விளையும்
மோதிவரும் மாவலியாள்!
எத்திக்கும் பூ வாசம்
எழிலோச்சும் பூமியிது!
தத்தைக்கும் குயில்களுக்கும்
தாலாட்டுந் தென்றலுலா!
அத்தை மகள் ரத்தினமே
அதிசயங்கள் பாரனடி!

அங்கேபார் மலையழகை
அதிலுறையும் பனியழகை!
எங்கும்பார் பசுமை நிறம்
ஏறி விழும் நீர்வீழ்ச்சி
தங்காது பாய்ந்து வரும்
தளராத நதியழகை
சிங்காரப் பூமியிது
சேயிழையே பாரனடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீலப்பட் டாடையென
　　நெஞ்சள்ளுங் கடல்பரப்பு
மாலைக் கதிர் பட்டு
　　மாயங்கள் ஆச்சுதடி
வேலாய்ப் படகுகளும்
　　விரைந்தோடு மழகென்னே!
வேலைப் பழித்த விழி
　　வஞ்சியிவை பாரனடி!

வெண்பஞ்சுக் கூட்டமுடன்
　　விளையாடும் வானம் பார்!
தண்ணென்ற வெண்மதியாள்
　　தாவி வரும் அழகைப்பார்!
விண்தழுவும் பட்சியினம்
　　விரைந்தோடும் அழகைப்பார்!
வண்ணக் கொடியிடையாய்
　　வஞ்சியிவ் வழகென்னே!

செந்தாமரை யதனில்
　　சேர்ந்துறையும் வண்டைப்பார்!
சொந்தங்கள் அவையாகிச்
　　சுகங்காணும் எழிலைப்பார்!
அந்தோ பார் உன்விழிகள்
　　அவைகண்டு கயலொன்று
சிந்தை குழும்பியது
　　சேற்றில் நுழைகிறது!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூப்பந்தல் போட்டாற்போல்
வெள்ளி, நிலாக் கோலங்கள்!
தோப்பு மலர்களெல்லாம்
தழுவி நமையங்கு
கூப்பிடுதல் கேட்கலையோ?
கோதாய் செவியேறலையோ?
பாப்புனைவோம் சென்று
பாவாய் வா இனிதாய்!

எங்கும் பார் வயல் மாட்சி
எழிலோச்சும் நீர்ச்சுனைகள்!
அங்கே பார் அல்லியவள்
ஆனந்தக் களிப்பதனை!
செங்கரும்பும் செந்நெல்லும்
சேர்ந்தாடும் அழகைப்பார்
நங்காய் இவ்வெழிலோடு
நாமிணைந்து கொள்வமடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் இந்து

இவள் பெயர் "இந்துராணி"
இந்த மலையக மண்ணின்
இயந்திரப் பேடு!
பனி, குளிர் காற்று
பாவை இவளின்
உற்ற நண்பர்கள்!

செட்டைகள் இல்லாது
மலையக வாசத்தைக்
கட்டியணைக்கும் சிட்டுக் குருவி!
கோழி கூவுமுன், சாமம் எழும்புவாள்
வேலைகள் முடித்து
தோழியர் தமைக் கூவியழைப்பாள்!

வாங்கடியோய்.....! குரல்
வானம்வரை அதிர்ந்து கொள்ளும்!
தோழியர் தன்னுடன்
பாடலிசைத்துத்
தேயிலைத் தோப்புடன்
தோய்ந்து கொள்ளுவாள்!

கார்த்திகைப் பூ விரல்கள்
கடுகதியாகும்! துளிரில்
காரியம் பார்க்கும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்காடிட்டு முதுகில்கூடை
கொஞ்சி மகிழ
அக்குளீர் காற்று, பனி, மழை தன்னில்
இக்கோதையன்னாள் இயந்திரம் ஆவாள்!

இவளின் கால்கள் மலையில் ஏறி, ஏறி
மரத்துப் போச்சு!
இவளின் மார்பகம்
விம்மி, விம்மிப்புடைத்துப் போச்சு!

சுருண்ட குழல்கள்
விம்மிப் புடைத்த மார்பகந் தழுவும், இவளின்
வெருண்டமானின் விழிகள், ஆங்கே
தேயிலைத் துளிரை விருந்தாய்க் கொள்ளும்!

கள்ளம் அறியாள் காரியமெல்லாம்
கோதை இவள் மண்ணுக் கென்பாள்!
ஊதியம் சொற்பம்!
ஊழியம் மிகவாய்
வாடி, வாடி, வதங்கி, வதங்கி
வாழ்நாளெல்லாம் வஞ்சியிவளின்
வாழ்க்கை நகர்வு மலையகம் உய்வதே!

சொந்த நிலமிலாள்!
வறுமையென்னுஞ் சிறையில்பட்டு
வாடும் பேதை!
அந்தோ அங்கே மீண்டும் இந்து!
வாங்கடியோய்...! கூவியழைக்கின்றாள்!
கூடைமீண்டும் முதுகில் தவழ்ந்திட....!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடக்கண்டறியேன்

சங்கத்துத் தொட்டிலிலும்
சான்றோர் கவியரங்கினிலும்
வங்கத்துக் கடல் வழியும்
வஞ்சியர் தம் அரங்கினிலும்
திங்கள், வான், தென்றல்
திசை நான்கு வழிகளிலும்
பொங்கும் அழகொளிரப்
பூவை நான் பூத்திருந்தேன்!

பூமாலை வாடுமென்று
புலவர் பெருமக்கள்
பாமாலை சூட்டியெனைப்
பணிந்தேற்றி நின்றார்கள்
தேமதுரத் தமிழாளென்றுத்
தேசமெங்கும் பூச்சொரிந்தார்
நாமம் புகழ் மணக்க
நங்கை நான் வீற்றிருந்தேன்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லேர் உழவர்களின்
   சொல்மாரிக் கூட்டத்திலும்
பல்லோர் புடை சூழப்
   படை மன்னர், மாமுனிவர்
கல்லார், நிலை வடித்துக்
   கவின்படைத்து நின்றோர்கள்
எல்லோர் மத்தியிலும்
   எழிலாய் இருந்தேன் நான்!

ஆடக் கண்டார் அம்
   அரம்பயர்தம் மருங்கெல்லாம்!
தேடக் கண்டார் எம்
   தென்னவரின் புகழாகும்!
நாடக் கண்டார் நல்
   நம் தமிழர் வீரமெலாம்!
வாடக் கண்டறியேன்
   வற்றிய தோர் நிலையறியேன்!

வங்கம் வழியதனில்
   வாணிபங்கள் வளர்ந்தனாவாம்
கங்கை வழியெங்கும்
   கன்னல் விளைந்தனவாம்
செங்கை வழியழகுச்
   செழுங்கலைகள் வளர்ந்தனவாம்
சங்கம் வழியதனால்
   தமிழன்னை நான் வளர்ந்தேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்துச் சிவந்தனவாம்
 கொடை மன்னர் கரங்களெல்லாம்
எடுத்துச் சிவந்த நிலை
 எக்கணமுங் கண்டதில்லை!
வடுத்தர் அணிந்ததில்லை!
 வாகை பல பெற்றுயுயர்ந்தோம்!
அடுத்தொருவர் கெட்டழிலை?

 அகத்தால் வெறுத்திருந்தோம்!
எட்டுத் திசை யனைத்தும்
 எம்மனார் புகழ் கண்டேன்!
கட்டுறுதி குறைந்த நிலை
 கணப்பொழுதுங் கண்டதில்லை!
பட்டநிலை யாமறியோம்
 பண்ணிசைத்துப் பல்வழியும்
பட்டாங்கில் யானுமிந்தப்
 பைந்தாமிழாள் வாழ்ந்திருந்தேன்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்திடுவாய்

கோதாய் அடிபெண்ணே
   கொழுந்து பறிப்பதற்கு
போதான இளங்காலைப்
   பொழுதில் புறப்படுதல்
நீதான் மறந்தனையோ
   நினைப்பென்ன உந்தனுக்கு
ஏதேது உன்னுறக்கம்
   இன்னும் நீ எழும்பலையோ....?

வேலை நினைப் பின்றி
   விழி மூடித்தூங்குவதேன்?
காலையரும்பிய தோ
   கதிரோன் வருஞ்செய்தி
மூலை முடுக்கெல்லாம்
   மோதுவதைப் பாரடியோய்!
சாலை நிறைந்த சனம்
   சலசலப்புக் கேட்கலையோ....?

தேயிலையின் துளிர் வாசம்
   தேடிவந்து உன்னிடத்தில்
ஏய் உன் மேனியதில்
   இன்னுந் தழுவலையோ....?
பாயில் கனவுலகில்
   பயிலுங் கோதாய் நீ
வாயேன் எழும்பனடி
   வஞ்சியர் நாம் வந்துற்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன நினைப்பலையில்
இன்னும் நீ நீந்துகிறாய்
சின்ன இடையாளெம்
சிட்டே உறக்கமென்ன?
கன்னையாக் கங்காணி
கத்தும் குரலுனக்கு
வன்செவியாம் உன்செவியில்
வந்தங்கு குத்தலையோ...?

கூடி நிறைந்திங்கு
கூடை கைஆளானோம்!
பாடி வருந் தென்றலதன்
பாட்டொலி தான் கேட்கலையோ?
ஏடி உன் பாலுனக்கு
என்னாச்சு....! எழும்பனடி!
வாடி விரைந்தோடி
வந்துற்றோம் தோழியர் நாம்!

கோயில் மணியோசை
கோதையர் தம் கொலுவோசை!
நீ யின்னுங் கேட்கலையோ?
நின்செவிதான் கல்லாச்சோ?
காய்வார் நம் கங்காணி
கல்நெஞ்சர் தெரியாதோ....!
ஓயாத உறக்க மென்ன?
ஒரு நொடியில் வந்துவிடு!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளையல் தரும் ஓசை!
　　வஞ்சியர் தம் குரலோசை
விளையும் நெல்லோசை
　　வீசிவருங் காற்றோசை!
அழையா விருந்தாக
　　அத்தனையுந் தான் மறக்க
இளையாய் அடி தோழி
　　இன்னும் நீ தூங்கிறியே!

உச்சி மலைக் காற்று
　　உன்னுடம்பைக் குத்தலையோ?
இச்சிறிய "லயம்" புகுந்து
　　இதயத்தைக் கிள்ளலையோ?
மச்சியடி பெண்ணே
　　மயக்கங் களையனடி!
பச்சை மலை போவோம்
　　பாவாய் நீ புறப்படுவாய்!

காத்துக் கால் கடுக்குதடி!
　　கண்மயக்கம் தீரலையோ...?
பூத்த விழி யோடே
　　பூவையர் நாம் வந்துற்றோம்!
சாத்திக் கதவதனை
　　சயத்தில் நீ மிதந்தால்
ஆத்திரந்தான் வந்திடாதோ
　　அடி இங்கே வந்திடடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடிவு எப்போது?

ஆணாதிக்க மென்னும்
அழுங்குப் பிடியின்னும்
வாணாளி லெம்மை யது
வருத்துதல் குறையவில்லை!

பெண்ணின அடிமை வாழ்வைப்
"பொசுக்குவோம்" என்றுரைத்தார்
மண்ணிதில் எமது வாழ்வில்
மாற்றங்கள் ஒன்றுமில்லை

சீதனக் கொடுமையின்று
செத்து ஒழிந்ததுவா...?
ஆதனம் இல்லோர் ஆயின்
அடிமைக் குடிமை நாம்!

பட்டினிச் சாவெமக்கு
பரம்பரைச் சொத்தாகும்!
கட்டிலின் சுகம் வரைக்கே
கவிகளாய் கனிவு கொள்வோம்!

விதவைகள் ஆனாலெங்கள்
வாழ்வதே முடிந்து போகும்!
கதவினை இறுகச் சாத்திக்
கண்ணீரில் மூழ்கவைப்பார்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவறை முதலாய்க் கொண்டு
கல்லறை வரையிலெம்மை
நெருடுதல் ஓயவில்லை
நிம்மதி இழந்த வாழ்வு!

"பெண் சிசு" என்றாலிங்கு
பேய்களாய் உருவமைத்து
மண் தனுக் கிரைகளாக்கும்
மானிடம் இதுவுமொன்று!

ஏட்டினில் பாட்டுத்தன்னில்
எம்மினம் அழகுதுள்ளும்!
நாட்டினில் வாழ்வு தன்னில்
நடைப்பிணம் நாங்களன்றோ!

பெண் விலங்கெம்மை யின்று
பேசிட வைப்பதில்லை!
கண்களைக் கட்டி வைத்து
காவியம் பாடுதிங்கு!

அடியுதை யல்லலோடு
அணைத்திடப் பணியவேண்டும்
முடிவிலாச் சிறையில்வாழ்வு
மலர்வுகள் மலர்வ தெப்போ (து)?

பெண்ணினக் கைவிலங்கைப்
பேர்த்திடும் நாள்தானெப்போ (து)
விண்வரை எமது வாழ்வில்
விடிவுகள் கிடைப்பதெப்போது (து)?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வதா சாவதா?

நாங்களோ மீனவச்சாதி - இந்த
நாடு மறந்திட்ட கூட்டம்!
தூங்காத இரவெம் வாழ்க்கை - எங்கள்
துண்டிலெம் துயரங்கள் கூறும்!
பூங்கா வனமாகும் கடல்கள் - எங்கள்
பொழுதுகள் அங்கேயே போகும்!
தீங்கினை அறிந்திடாக் கூட்டம் - கடல்
திசையினை மட்டுமே காட்டும்!

மாலை வந்ததும் தோணி - கை
மனதினை வைத்தது ஆளும்!
நீலக் கடல் கிழித் தோடும் - சுக்கான்
நேர்த்தியாய்த் திசையினைக்காட்டும்!
ஓலமிடும் அலை மோதும் - தோணி
மேலுங் கீழுமாய் ஆகும்!
மேலைக் காற்றங்கு மோதும் - குளிர்
மேனி விறைத்திடச் செய்யும்!

மழை, பனி மாதங்களென்று - இந்த
மீனவன் பார்த்திட மாட்டான்!
களைத்திடச் செய்வதுமில்லை - எதையும்
கண்டு மிரள்வதுமில்லை!
கிளையாக மீனகளும் துள்ளும் - தூண்டில்
கண்ணாக நின்றவையள்ளும்
துளைத்திடும் துப்பாக்கிச் சத்தம் - எம்மை
தூண்டில் புழுப்போல ஆக்கும்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுக்கடல் தன்னிலே தோணி - சிதறி
நாமங்கு மாள்வது முண்டு!
நடுக்கத் தோடு தான் வாழ்க்கை - இந்த
நாடு இதை நன்கு அறியா (து)
உடுக்கத் துணி மணியில்லை - இல்லம்
உண்டு மகிழ்ந்திட இல்லை
எடுக்கக் கடல் வளமுண்டு - எமக்கு
ஏதேனும் ஆதாயமில்லை!

சொந்த மாய்த் தோணிகளில்லை - சின்னச்
சுக்கானே இல்லாத கூட்டம்!
வெந்தபுண் ஆறாத வாழ்க்கை - நிதம்
வேதனை, சோதனை ஆனோம்!
நொந்த எம் மீனவர் கூட்டம் - நிதம்
நூலாய் இளைத்திட்டுப் போனோம்!
வந்தவர், போனவரெல்லாம் - எம்மை
வாழ்த்துவார் வேறொன்றுமில்லை!

ஆழ்கடல் சீவியம் ஐயா - நாம்
ஆயிரம் இழப்பினைக் கண்டோம்!
நாளதாய் உழைத்திடுங் கூட்டம் - இந்த
நாட்டிற்கே நாமொருதேட்டம்
வீழ்வதே எம்மவர் வாழ்க்கை - எமக்கு
விடிவுகள் ஒன்றுமே இல்லை!
வாழ்வதா? சாவதா? நாங்கள் - எங்கள்
வரலாறு ஓர்பதில் கூறும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிந்து வெல்

பெண்ணே! நீ
புராணங்களிலும், பொன்
வாசகங்களிலுந்தான்
பவித்திரமாக்கப்பட்டுள்ளாய்!
மற்றய வழிகளில் நீ
பயித்தியமாக்கப்பட்டவளே!

உன்னைப் பற்றிப் புளுகி
எழுதிக்குவித்தவர்களே,
உன்னைப் பிற்பாட்டில்
புழுதியாக்கியும் வைத்தனர்!

மனைகளுக்கு மட்டுமே நீ
வசீகரிக்கப்பட்டவள்
மற்றும்படி நீ
மாயைக்குரியவளாகியே
வஞ்சிக்கப்பட்டவள்!

மானே, தேனே என்றுன்னை
மயக்கியவர்கள் பின்னால்
தாமாகவே விலகி உன்னைத்
தவிக்க விட்டதனை நீ
மறந்திருக்க நியாயமில்லை

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பு, என்பதற்குக் கருப்பொருள் ஆனவளே!
தப்புச் செய்யும் ஆடவர் அதிலே
தப்பிக் கொள்கிறார்களே!
செப்புதல் செய்யும் மானிடம் எங்கே
செத்தா தொலைந்தது?
சிக்கிக் கொள்பவள் நீமட்டுந்தானே!

அடிமை, தொண்டு உன்னிடமிங்கு
அதிகமாகி விட்டதா?
அலசிப் பார்க்கிறேன்!
தாய்மைக்குரியவளே! நீ
தாழ்மை என்பதிலும் தகைமை பெற்றுளாய்!
அடிமை என்பதனை
அணிகலன் ஆக்கியும்

அடக்கம் என்பதனை
ஆசீர்வாதமாக்கியும்
அச்சம் என்பதனை
அடித்தளமாக்கியும்
அவதிப்படுகின்றாய்!

நீ என்ன நினைக்கின்றாய்...?
உனக்குள்ளேயே ஒரு
தாழ்வுச் சிக்கல்,
தலை விரித்தாடுகிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாமை என்றொரு
ஏழ்மை நினைவு உன்னை
எதேச்சதிகாரம் செய்கிறது!
துணிவு சற்று தூர நிற்கிறது!
தனித்து நின்றுபே சிட நீ
தயக்கம் காட்டுகிறாய்!

ஆடைகுறைத்துன்னை
ஆட வைப்பவர்கள், உந்தன்
அடி நாதத்தையே
அழித்தொழிப்பதனை நீ
அறிந்து கொள்கிறாய் இல்லை!

நாகரீகம் எனும் பெயரில் நீ
நகைக்கும் படியாக
நர்த்தனம் ஆடுகிறாய்!
ஆதலினால் திரும்பிப்பார்!
திசையை மாற்று!
சாதுவாக இராதே!
சாதுரியமாகத் தீமையைப் பொசுக்கு!

அஞ்சுவது பேதமை!
நிதான நெறியுடன்
நேர்வழி செல்!
அடக்கி வாழ்வதையும்
அடங்கி வாழ்வதையும்
துணிந்து வெல்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரம்

அகதிகளாக அல்லல்பட்டு
அலைந்து திரிந்தோம்
சகதிகள் எங்கும் கால்கள் பாய்ச்சிச்
சரித்திரம் படைத்தோமே!

காடும் மேடும் ஏறி இறங்கியே
கவலைகள் உற்றோமே!
தேடுங்கல்வி அனைத்தும் இழந்தே
தேம்பி அழுதோமே!

சுற்றி வளைத்தே சூறையாடினர்
சிந்தையழிந்தோமே!
பற்பல ஆண்டுகள் சிறையில் வாடியே
பரிதாபம் ஆனோமே!

குண்டு வெடியினால் குடலே சிதறிடக்
கூக்குரல் இட்டோமே!
கண்டு பலபேர் களிப்புற்றிருந்ததைக்
கண்டும் வாழ்ந்தோமே!

பச்சைக் குழந்தைகள் பரிதாபமாகவே
படுகொலை ஆனதனை
உச்சி வெடிக்க உணர்வுகள் செத்திட
உளமதில் ஏற்றோமே!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவர் முன்னால் மனைவியர் கற்பு
கறந்ததைச் சொல்லிடவா?
மனதே பதறிட மாங்கல்யம் இழந்தவர்
மாகதை கூறிடவா?

எத்தனை எத்தனை துயரக்கதைகள்
எங்களின் வாழ்க்கையிலே
அத்தனையாவும் இழந்திட்ட எமக்கு
ஆனது ஒன்றுமில்லை!

போக்கும் வரத்தும் ஆன சுதந்திரம்
புதுமை பூப்பதில்லை!
ஏக்கத்தோடு வாழ்ந்திட்ட எங்கள்
ஏக்கந் தீரவில்லை

எத்தனை இளசுகள் சுதந்திர வேட்கையால்
இன்னுயிர் மாய்த்திட்டார்!
அத்தனை இழந்தும் ஆனது என்ன...?
ஆவி துடிக்குதய்யா!

சில்லறைச் "சொகுசுகள்" சுதந்திரம் ஆகா (து)
சிந்தனை செய்திடுவீர்!
தொல்லைகள் எதுவும் இல்லாத வாழ்வே
தூய்மைச் சுதந்திரமாம்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுது வடிக்கிறேன்

கேஸ் அடுப்பின் தீப்பிளம்மை விட
நெஞ்சு கொதித்தது!
ரணமாய் வலி மிஞ்சி நின்றது!
புரண்டு, புரண்டு படுத்துப் பார்த்தும்
நித்திரை என்னில்
நிலைக்க மறுத்தது!

ஏன்? எது? என்றா கேட்கிறீங்கள்
கொஞ்சங்கேளுங்கள்!

அப்பரின் சொத்துச் சுகமென ஆங்கோ
மூன்று ஏக்கர் தஞ்சை நிலந்தான்...!
இதனை ஓய்தல் இன்றி ஓடியோடி
காற்றாய் எங்கும் அலைந்து அலைந்து
விற்றுச் சேர்த்த மிச்சப்பணம்
ஒரு லட்சம் எனது கையில்!

மகேஸ் அக்கா ஐந்து வீத
வட்டிக்கென்று
மனமிரங்கிக் கடனாய்த் தந்தது
இரண்டுலட்சம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உடுக்கையிழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைந்த" நண்பன் சந்திரன்
தந்து உவந்தது இரண்டுலட்சம்!

அம்மா மனிசி பொத்திக் காத்துச்
சேர்த்த காசு ஐம்பதினாயிரம்!
மொத்தமாக ஐந்து லட்சத்து
ஐம்பதினாயிரம் கையில் சிரித்தது!

இத்தனை எல்லாம் அக்கா அவளின்
திருமணம் அதற்கே!
சீதனமாக நாலுலட்சம்!
போடப்பட்ட நகைகளோடு
காணி, வீடு அதற்குள் ஆன
தட்டு, முட்டுச் சாமான்களெல்லாம்
காசோடு வேண்டுமாம்!

கதையொன்று மின்றிச்
சம்மதம் சொன்னோம்!
மாப்பிள்ளை நகரின்
ஓட்டோ றைவர்!
குடிவெறியோடு கெட்ட பழக்கங்கள்
ஒன்றுமில்லையாம்!
நல்ல பிள்ளையாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காவும் என்ன சும்மாவா....?
அவளும்
ஆரம்பக் கல்வி ஆசிரியை நல்ல
அடக்க ஒடுக்கம் கனிவு, இனிமை
அன்புப் பேச்சு அவளிடமென்றும்
ஆட்சி புரியும்!

மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிக் கிடந்தேன்!
வாடி வதங்கிக் கிடந்த எந்தன்
அம்மா மனிசி அவருங்கூட
எம்மாத்திரப் புன்னகை....!

அக்கா அவளின் உள்ளக்கிளர்ச்சி
சொல்லி முடியாது!
கல்யாண வேலையில் கடுகதியானேன்!
தூக்கமின்றித்
துடித்துச் செயற்பட்டேன்!

அப்படியான நேரத்திலேதான்
குண்டு வெடித்துச் சிதறிய உடல்போல்
மனம் வெடித்துச் சிதறிக் கொண்டது!
மாப்பிள்ளை வீட்டுக் கொடூர அந்தச்
செய்தியைக் கேட்டு...!

"எளியசாதியாம் நாங்கள்" எம்முடன்
சம்பந்தம் கலப்பதைத்
தவிர்த்துக் கொண்டனராம்!
பயித்தியக்காரனாய் மாறி உழன்றேன்
மேலும் கீழுமாய் புரண்டு, புரண்டு
அழுது வடிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடிக்கின்றேன்

எழுதி எழுதிக் குவித்திடவும்
ஏழ்மைகள் அழித்து இன்புறவும்
பழுதில்லாத பணிகளாற்றிப்
பாரில் வாழத்துடிக்கின்றேன்!

சமத்துவம் இணைந்த செயற்பாட்டை
சகோதர பாச உணர்வுகளை
அமர்க்களம் இல்லா அரசாட்சி
அனைத்துங் காணத்துடிக்கின்றேன்

ஒற்றுமை உணர்வு ஓங்கிடவும்
உழைத்து இன்பம் பெருக்கிடவும்
கற்போர் கூட்டம் மிகுந்திடவும்
கண்டு மகிழத்துடிக்கிறேன்!

துப்பாக்கி யுகங்கள் தொலைந்திடவும்
துர்ப்பாக்கிய நிலைகள் சரிந்திடவும்
தப்புத் தவறுகள் ஒழிந்திடவும்
தினமும் இவைக்காய்த் துடிக்கின்றேன்!

அகதிகள் கூடம் அத்தனையும்
அருங்கலைக் கூடம் என மாற்றி
அகமகிழ்வோடு அனைவருமே
ஆடக் காணத்துடிக்கிறேன்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாதும் ஊரே" எனும் நிலையும்
"யாவருங்கேளீர்" எனும் பாங்கும்
கீதம் போன்று செவியேறிக்
கீர்த்தி நிலவத் துடிக்கின்றேன்!

சொந்தக் காலில் நின்றிடவும்
சுகமாய்க் காற்றை நுகர்ந்திடவும்
செந்தமிழோடு சிங்களமும்
சேர்த்து வாழத் துடிக்கின்றேன்

இறவாப் புகழ் நூல் இயற்றிடவும்
எண்ணம் விரித்துக் கற்றிடவும்
உறவுப் பாலம் அமைத்திடவும்
உணர்வுகள் ஓங்கத் துடிக்கின்றேன்!

ஆண்டான் அடிமை நிலை வேண்டாம்
அவரவர் திறமைக்கு மதிப்பளிப்போம்!
வேண்டிய வழிகள் சமைத்திடுவோம்!
வெல்வோம் விரும்பித் துடிக்கின்றேன்!

உழைப்போர் அனைவரும் ஒன்றாகி
ஊனும், உடையும் உறைவிடமும்
பிழையில்லாது நிறைவுடனே
பெற்றுக் காணத்துடிகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வதி ஆச்சி

"பார்வதி ஆச்சி" இவளை அன்புடன்
பலரும் இப்படி அழைப்பது வழக்கம்?
வயது எண்பது முதுகு கூனி
கேள்விக் குறியாய்
ஆகி உளது?

லொக்கு லொக்கென
பொல்லையூண்டி விசரிபோல
ஆச்சி திரிவாள்!
பல்லுக் கில்லு ஒன்றுமே இல்லை?
மல்லுக் கட்டியே
சோற்றை மெல்லுவாள்!

பெற்ற பிள்ளைகள் ஏழு ஆச்சிக்கு
பேரக் குழந்தைகள் முப்பத்தெட்டு!
பாட்டி மட்டுமா?
பூட்டியும் ஆயிற்றாள்!

ஓலையால் வேய்ந்த
சின்னக் குடிசையில்
ஒண்டிக் கட்டையாய்
ஆச்சி வாழ்கிறாள்!
ஆச்சியின் மாதவருமானம் என்றால்
பிச்சைச் சம்பளம் இருநூறு மட்டுமே!
கூழோ கஞ்சியோ எதுவோ ஆயினும்
ஆச்சி கையால் ஆக்கியே உண்பாள்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாளும்
ஒருவேளை உணவுதான்?
மாற்றிக்கட்டவும் சேலைகள் இரண்டு தான்!
காற்றைப்போல உழைத்தவள் ஆச்சி
காய்ச்சல் தலையிடி
கண்டது மில்லை!
பெற்றபிள்ளைகள் பேரக் குழந்தைகள்
மருமக்கள் உட்பட
உற்றார் உறவினர்
அனைவரும் ஆச்சியை
முகத்தால் பார்க்கும் பார்வை மட்டுமே!

மண்ணைக் கிளறி
காய்கள் பிஞ்சுகள்
விளைத்தும் ஆச்சியின்
பிழைப்பு ஓடும்!

வறுமை நிலையிலும்
ஆச்சியின் தொங்கல் சேலை முடிச்சில்
சில்லறைக்காசு தொங்கிக் கொள்ளும்!

அதனை அவிழ்க்கவே
ஆட்கள் அதிகம்!
ஆச்சியுங் கொடுப்பா!
வயது ஆனாலும், ரோசம், மானம்
வீரிய மனமும் கொண்டவள் ஆச்சி!
ஆச்சியின் அப்புவும் அப்படித்தானாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சாரச் செய்

ஆசிரியனே.. உன்னை
ஆசு இரியன் என்பார்கள்
தூசு துடைத்தழகு
தூய்மை தருபவன் நீ!
உந்தன் கைகளில் மலர்வது
பிஞ்சு மழலைகள் அன்றோ!

அஞ்சாமை, நேர்மை, அறிவுடைமை
இவையனைத்தும்
கொஞ்சமேனும் குறையாது
கொடுத்துதவுபவன் நீயன்றோ!

தூங்காது பள்ளிதனில்
துன்பத்திலும் சிரித்திட வேண்டியவன் நீ!
கோடானு கோடி பெறும் உந்தன் சேவை!
கும்பிட்டுத் தொழுதிடலாம் உன்னை ஐயா!

உலகத்தின் ஒளி விளக்கே!
உண்மையெனும் பயிர் விளையும்
உயர்ந்த விளை நிலமே
உன் உழைப்பிற்கு உவமையிலை!

புண்ணியங்கள் கோடி செய்பவனே!
உனக்குலகின் "சா" இலை!
உனக்கென்றொரு வரலாறு
உலகில் உண்டிதனை
நினைத்துனது பணியதனை
நெஞ்சாரச் செய்து விடு!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனாக்கண்டேன் தோழி

எந்தன் தோழி அடி பெண்ணே!
என்ன அதிசயம் கேட்பாய் நீ
அந்தோ எங்கள் திரு நாட்டில்
அழகு என்ன...! ஆச்சரியம்!
சொந்தம் மலரக் கைகோர்த்துச்
சுற்றித்திரிந்தார் நம்மவர்கள்
இந்தப் புதுமைக் கோலங்கள்
எல்லாம் கனவில் கண்டனடி!

வெள்ளையமுது கொடுத்தொன்றாய்
விருந்து உண்டு மகிழ்ந்தார்கள்
அள்ளியணைத்து இனமொன்றாய்
ஆசை வார்த்தை பகிர்ந்தார்கள்
தெள்ளு தமிழில் சிங்களத்தில்
தேமதுரப் பாட்டிசைத்து
கொள்ளை யின்பங் கொண்டார்கள்
கோதாய் இன்னுங் கேளனடி!

வண்ண வண்ணத் தோரணங்கள்
வாசலெங்கும் நிறைகுடங்கள்
கண்ணைப் பறிக்கும் கூத்துக்கள்
காவடி கரக ஆட்டங்கள்
கண்கவர் கண்டிய நடனங்கள்
காளையர் கன்னியர் ஆட்டங்கள்
விண்ணைப் பறித்தன அடிதோழி
வெற்றிக் களிப்பைக் கண்டனடி

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மண்ணில் இனித்துயரம்
இல்லை யில்லை என்றார்கள்
விலங்கை யறுத்து வென்றிட்டோம்
வெற்றி வெற்றி என்றார்கள்
நிலங்கொள் ளாதுநிறைந் தார்கள்
நிமிர்ந்த நடையில் சென்றார்கள்
வலம்வந் தெங்கும் திரிந்தார்கள்
வாழ்த்து ஒலிகள் நிறைந்ததடி!

எங்கும் வாழ்க ஒலியோசை
இனிய இன்பப் பாட்டோசை
பொங்குங் கடல்போல் திரண்டங்கு
புதுமை படைத்துத் திரிந்தார்கள்
சங்கு, முரசம் வாத்தியங்கள்
சலங்கை யொலிகள் நர்த்தனங்கள்
அங்கெங் கெல்லாம் அதிசயங்கள்
அனைத்தும் கனவில் கண்டனடி!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் போச்சுது

என்ன சுதந்திரம்
உண்டிங்கு என்று நாம்
எண்ணிக் கலங்குகின்றோம் - எங்கள்
அன்னையும் தந்தையும்
வாழ்ந்திட்ட மண்ணிது
என்று நாம் போற்றுகின்றோம்!

சொந்தமாய் வாழ்ந்திட்ட
சுந்திரப் பூமியில்
சோதனைச் சாவடிகள் - எங்கள்
இந்த நல் மண்ணினில்
எத்தனை இன்னல்கள்
எண்ணிக் கலங்குகின்றோம்!

சொட்டுச் சொட்டதாய்
வியர்வை சிந்தியே
சேர்ந்திட்ட மண்ணிது வாம் - இங்கு
கட்டுக் குலையாமல்
வாழ்ந்திட்ட கூட்டத்தைக்
காலால் மிதித்துள்ளீர்!

காடு திருத்தி நாம்
களனி ஆக்கினோம்
கடின உழைப்போச்சி - அங்கு
தேடிய செல்வங்கள்
எல்லாமே போச்சுது
தெரிவில் அலைகின்றோம்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பென்று
பதுங்கியழிக்கின்றீர்
பாதைகள் மூடிவிட்டீர் - எங்கள்
மூதாதை யன்னாரின்
முதுசொம் மண்ணிது
மூடி மறைத்துள்ளீர்!

எங்கள் கடல்வளம்
எல்லாமே உங்களின்
ஆயுதக்கும்பலிடம் - இங்கு
எங்கள் உரிமைகள்
ஏன் இந்தப் பறிப்புக்கள்
எண்ணிக் கலங்குகின்றோம்!

ஓடி ஓடி நாம்
உழைத்திட்ட கூட்டமாம்
ஓயுதல் செய்துவிட்டீர் - தினம்
ஆடி ஆடி நாம்
ஆனந்தம் கொண்டவர்
அன்னியர் ஆக்கியுள்ளீர்
சட்டம் போட்டெமைச்
சாடி வதைப்பதேன்
சாதனை என்ன இதனால் - தினம்
பட்டினிச் சாவினைச்
சந்திக்க வைத்திட்ட
பட்டாளம் நீங்களன்றோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றாய் உணர்த்துகின்றோம்

ஆண்டு ஆண்டதாய் அடிமைப்பட்டு நாம்
அல்லல் ஆனவர்கள் - நாளும்
நீண்டு கொண்டிருந்த துயர வாழ்வதால்
நெஞ்சம் இழந்தவர்கள்

கோடிகோடியாய் உழைத்திட்டு நாட்டினைக்
கோபுரம் ஆக்கியவர் - நாம்
மாடி வீடதும் மெத்தைப் படுக்கையும்
மனதால் அறியாதோர்!

பனியும், பிணியும் பரிதாப நோக்குமாய்ப்
பரம்பரை ஆனவர்கள் - என்றும்
தணியா வறுமையும் தளர்வுறு நடையுமாய்த்
தலைவிதி ஆனவர்கள்!

பசுமை என்பதை வாழ்க்கையில் நாங்கள்
பார்த்தே அறியாதோர் - நாளும்
கசியும் நீரதைக் கண்களில் நிறைத்திட்டுக்
காலத்தை ஓட்டுபவர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் பொழுது மாய்ச் சுதந்திரதாகத்தில்
நாங்கள் நனைகின்றோம் - அது
நாளை வருமென்ற நம்பிக்கையோடே நாம்
நாளைக்கழிக்கின்றோம்!

எங்கள் சுதந்திரப் பாதையை மூடியே
எட்டி உதைக்கின்றீர் - புதுச்
சங்கம் முழங்கிடச் சுதந்திரகோசத்தைச்
சந்திக்கும் நாள் வருமாம்!

எங்கள் சுதந்திரம் உரிமையின் சாசனம்
எங்கள் உயிருக்குமேல் - இதை
உங்கள் வன்மையால் உதாசீனம் செய்திடில்
பொங்கி எழுந்திடுவோம்!

பொங்குதல் செய்திடில் புவனமே ஆழ்ந்திடும்
பொறுமைக்கும் எல்லையுண்டாம் - இதை
உங்களால் ஒன்றுமே செய்திடஇயலா(து)!
ஒன்றாய் உணர்த்துகின்றோம்.

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன நியாயம்?

திட்டங்கள் தீட்டியெம்மைத்
தீயினுள் ஆழ்த்தி வைத்தீர்!
அட்டைபோல் உறுஞ்சி நாளும்
ஆள்பவர் நீங்களன்றோ?
சட்டங்கள் போட்டுச்சந்தி
சந்தியாய் வளைத்துப் பிடித்து
வெட்டியும் சுட்டும் எம்மில்
வெறிக்குணம் தீர்த்தோர் நீரே!

கொஞ்சமா கொடுமை செய்தீர்!
குரல் வளை நெரித்த கதைகள்...!
கஞ்சிக்கும் வழிகளற்று
கவலைக்குள் மூழ்கிக்கொண்டு
பஞ்சங்கள் பயண வாழ்வில்
பாசறை வைத்து மாய்க்க!
நெஞ்சங்கள் புண்கள் ஆக
நினைத்திட விழிகள் தோயும்!

கட்டுண்டு பொறுத்து நாளும்
கண்ணீரில் நனைந்து வாழந்தோம்!
பொட்டினைப், பூவைப் பிஞ்சுக்
குழந்தையை இழந்து நின்றோம்!
தொட்டது அனைத்தும் நாளும்
தோல்வியில் நனையச் செய்து
கொட்டங்களோடு எம்மைக்
கொடுமையில் ஆழ்த்தி வைத்தீர்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தையுந் தாயும், அவரை
ஈன்ற எம் பாட்டன்பாட்டி
முந்தையர் வாழ்ந்த மண்ணெம்
முதுசொம் ஆகும் எங்கள்
கந்தனும் காளியம்மை
கண்ணனும் அளைந்த மண்ணில்
முந்தநாள் வந்து சேர்ந்தோர்
மிரட்டுதல் என்ன நியாயம்!

ஏழையாய் ஆக்கியெம்மை
எட்டியே உதைத்து வைத்தீர்!
வாழிடம் பொசுக்கியெம்மில்
வஞ்சனை தீர்த்துக் கொண்டீர்!
வேளைக்கு உணவு இன்றி
வெந்து நாம் நொந்தோமானால்
கோழைகள் ஆக மாட்டோம்!
கொள்கையில் சிதறமாட்டோம்!

எத்தனை வறுமை, துன்பம்
ஏழ்மைகள், இழிவு வாழ்வு
அத்தனை வந்து எம்மை
அழிவுகள் செய்த போதும்
சித்தம் நாம் கலங்கமாட்டோம்!
சிறுதுளி அவைகள் தூசாம்!
சொத்திது எங்கள் மண்ணின்
சுதந்திரம் படைத்தே மாள்வோம்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலாவருவோம்

பாடிவரும் சோழகத்தில் - உன்
பாவாடை ஆடிவர
தேடியெதை ஓடுகிறாய் - இனிய
தெம்மாங்கு இசையோடே!
வாடிவிழும் உன்னிடையில் - கரு
வண்டூதும் குழலாட
ஏடியுன் செய்தியென்ன - ஏது
என்ன உன் அவசரங்கள்!

புத்தம் புது றோசாவாய் - நிதம்
புன்னகைக்கும் உன்முகத்தின்
கத்திபோல் கூர்விழிகள் - அதன்
கடைப்பார்வை கொல்லுதடி!
நித்தமுன் தரிசனத்தால் - வானத்து
நிலா கூட வாடுதடி!
பித்தாக்கி வைத்தென்னை - நீ
போசாது போவதென்ன....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் வரிகள் போல் - அடி
    பாவை நீ வாழ்வதென்ன...?
ஊடல் ஒழித்தெந்தன் - இனிய
    உணர்விற்கு விருந்தாகு
நாடித் தவம் புரியும் - உந்தன்
    நாயகனாம் எந்தனது
நாடித்துடிப் பதனை - சற்று
    நாடிப் பிடித்துப்பார்!

தேனாய் இனிக்கின்ற - இனிய
    தென்றல் போல் வந்தெந்தன்
மேனி தழுவுவதாய் - தினம்
    மெய்மறந்து நிற்கின்றேன்
வீணாய் வதைத் தென்னை - நிதம்
    விரக்தியுறச் செய்யாதே!
கானா அமிர்தம் நீ - கன்னல்
    கவியென்பேன் உன் பார்வை!

தென்னன் தமிழ் போன்று - உந்தன்
    தரிசனங்கள் தருமின்பம்!
இன்னும் பார் என்றுந்தன் - இனிய
    எழிலோச்சி நிற்குதடி!
என்னாவி படுந்துயரம் - அடியோய்
    உனக்கெங்கே வெளிச்சமது...?
பொன்னாவரம் பூப்போன்ற - உந்தன்
    பொன்நிறந்தான் என்ன பெறும்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் பிடிக்கல்லையோ - ஏன்
என்னிடத்தில் என்ன குறை...?
கன்னங் கரேலென்ற - எந்தன்
கரியநிறம் சகிக் கொணாதோ!
கண்ணன் அவன் கூட - அடி
கரிய நிறந் தானேடி!
அன்னான் அழகுதனில் - இங்கு
ஆர்சிக்கி நிற்காதோர்....?

கூடிக் கதையளக்க - எனக்குள்
கோடி நினைவுகளாம்!
ஆடிப்புது ஆறாக - என்ன
அவசரத்தில் ஓடுகிறாய்...?
வாடி நீ வஞ்சியலோ - என்னை
வதைத்து ஒதுக்காதே!
தேடிச் சுகம் பெறுவோம் - இந்தத்
திக்கெல்லாம் உலாவருவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதுவும் வேண்டாம்

எழுத்தாளன் வாழ்க்கைதனில்
செத்தே வாழ்ந்தான்!
எழுத்ததனால் எய்தியது
ஒன்றுமில்லை!
முழுப் பயனும் செத்த பின்பே
என்றாலந்த
இனிய புகழ் எம்மவர்க்கு
எதற்கு வேண்டும்....!

பேனைதனைப் பிடித்தவனின்
கைகள் காய்க்கும்!
பெரிய புகழ் காய்த்திடாது
இவனின் வாழ்வில்!
தேனடையாய்க் கவியூறும்
தினமும் வாழ்வில்
திக்கெட்டும் வறுமையதும்
ஊதிக் கொள்ளும்!

பழுதிலாது எழுத் ததனைப்
பாரில் வைப்பான்!
பழுதவனின் வாழ்க்கைதனைக்
கவ்விக் கொள்ளும்!
உழுதுழுது பேனையதால்
உயிரைவைத்தும்
உலகதிலே அவனுயிர்க்கு
ஒன்றுமில்லை!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனையில் அழகுகளைக்
கட்டி வைப்பான்!
கவினிழந்த வாழ்க்கையுடன்
காலம் மேய்ப்பான்!
பற்பலவாய்ப் பாதையினைப்
பாடிவைப்பான்
பசியறியாப் பாதையவன்
பார்த்ததில்லை!

தொட்ட தெலாம் கவியூறும்
கவிஞன் வாழ்வில்
தொட்டதெலாம் வறுமையதும்
தொடருமவனை
அட்டையதாய் அவனுயிரைத்
துயருமப்பும்
அவனெடுத்த ஜென்மமிது
ஆர்மேல் குற்றம்....?

எக்கீழ்மை இவனுறினும்
இவனினத்து
இருள் கிழித்து ஒளியூட்டி
இதங்கள் கூட்டும்!
எக்காலம் சென்றிடினும்
இருந்து வாழும்!
இதுபோதும் இவனுயிர்க்கு
எதுவும் வேண்டாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை எங்கள் வானில்

தோழி அடி பெண்ணே - உந்தன்
தோழி கனாக் கண்டேன்!
வாழை கமுகு என்று - எங்கள்
வாசல் கட்டி நின்றோம்!
நீளத் தெருக்களெல்லாம் - இனிய
நிறை குடங்கள் வைத்தோம்!
காளை இளையமாதர் - நடனக்
காட்சி வெள்ளங் கண்டேன்!

எங்கள் மண்ணின் வாசம் - அது
எமக்கேயாகக் கண்டேன்!
எங்கள் தேசக் கொடியை - எங்கும்
ஏற்றியாட வைத்தோம்!
எங்கள் மொழியும் வளமும் - மேலாய்
எங்குமொளிரக் கண்டேன்
பொங்கு தமிழினூடே - மேலும்
புதுமை செய்து வைத்தோம்!

ஆழக் கடலின் மீதும் - அந்த
ஆகாய வெளிகள் மீதும்
மீள உரிமை பெற்றோம் - புகழ்
மிஞ்சி ஓங்கக் கண்டேன்!
பாளைச் சிரிப்பினூடே - மக்கள்
பாடி வருதல் கண்டேன்!
"நாளை எங்கள் வானில்" - இவை
நடந்தே ஆகும் தோழி.

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நில்லடி யோய்

சின்னச் சின்ன றோசாப் பூ
சேர்த்துப் பார்த்தேன்
உன் முகந்தான்
கன்னல் சாறே தோற்றுவிடும்
கனியே உந்தன்
பேச்சென்பேன்!

சின்னத்துண்டுப் பிறையதுவும்
சிந்தேயுந்தன்
நுதல் காணின்!
தன்னில் வாடிச்சோர்ந்துவிடும்
தமிழாய் என்னை
அணைக் கின்றாய்!

கவிதைச் சுவையாம் கண்ணழகு
காந்தம் போல
இழுக்குதடி!
குவியும் கூத்துன் இதழ்காணின்
குங்குமப் பூவும்
வாடுமடி

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடியும் உந்தன் இடைகாணில்
ஓயா (து) வேயும்
ஓடியுமடி!
அடியுன் புருவம் என்னென்பேன்
அருச்சுனன் வில்லே
நாணுமடி!
படரும் எந்தன் ஆசைதனை
பாவை நீயேன்
அறியவில்லை!

இன்னும் பாரென உன்பார்வை
இழுத்து மடக்கும்
இதயமதை!
கன்னம் வழியும் அழகுகளால்
காவியம் பலதும்
எழுதிடலாம்!

பாதம் நோகப் பாவையடி
பயணம் எங்கே செல்கின்றாய்?
ஏதுன் அவசரம் நில்லடி யோய்
இன்ப உலகில் நனைந்திடுவோம்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேட்கிறேன்

என்னைப் படைத்திட்ட
இறைவனே கேட்கிறேன்!
எனனைப் படைத்து
இன்னல் தருகின்றாய்
விண்ணில் இருந்து நீ
வேடிக்கை பார்ப்பது
வேண்டுமா உனக்கிது?
வினயமாய்க் கேட்கிறேன்!

பணத்தினால் வையம்
பாதாளம் அப்பாலும்
பாய்வதை அறிவாயா?- பாவி
நான் கேட்கிறேன்
இணக்கங்கள் இல்லா (த)
இயந்திர வாழ்க்கை
இருட்டினில் உலகம்
இருப்பதையுணர்வாயா?

அதிகாரச் சண்டைகள்
அவரவர் வாழ்கையை
அலங்கரித்திருப்பது
அடுத்துக்கெடுப்பது
அதிகரித்திங்கெல்லாம்
ஆட்சிபுரிவதை
அறியாதிருக்கிறாய் அன்புக்குரியோனே.

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமுளோன் இங்கு
பெரியோன் ஆகிறான்
பலமற்றிருப்போன்
பள்ளத்தில் வீழ்கிறான்
கலகங்கள் ஆக்குவோன்
எவனோ அவனேதான்
கலகங்கள் அடக்குவோன்
ஆகியுங் கொள்கிறான்

நாடாளும் ஆசைகள்
நாட்டினைப்பிடித்து
நலித்திடம் ஆசைகள்
நல்வழி தன்னில்
தேடாது செல்வம்
திருடிடும் ஆசைகள்
தினந்தினம் இங்கெல்லாம்
துளிர்ப்பதைப் பார்த்திடாய்

ஏழையாய் இருப்பவன்
என்றுமே ஏழையாய்
இருக்கின்ற ரகசியம்
ஏனென்றுணர்த்துவாய்...
நீளநெடுங்கல்
நிலமெலாம் படைத்திட்ட
நித்தியசீலனே
நின்னைக் கேட்கிறேன்.

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓயமாட்டோம்!

இந்நாட்டின் நலன்களுக்காக
உழைத்துழைத்து ஓடாய் ஆனோமே
உழைப்பிற்குரிய ஊதியந்தந்தீர்களா?
எம்பிழைப்பிற்கு வழி செய்தீர்களா?

அழைத்த பொழுதெல்லாம்
அடைமழை, இடி, முழக்கம்
கொட்டும்பனி, குளிர்வாடை
கல், முள், கனத்த பெருங்காற்று
அட்டைக்கடி அனைத்தும் பொறுத்து
வந்து உங்கள் வாடிக்கையாளர்களாய்
வருந்தி, வருந்தி உழைத்தோமே
வறுமை ஒழிந்ததா
வருத்தும் "லயம்" வாழ்வு ஒழிந்ததா?

மலையேறியேறி மரத்துப் போன கால்கள்
குளிர்எனினும் தேயிலை தளிர் கொய்து
தளர்ந்து போன விரல்கள்
ஒவ்வொன்றாய் எலும்புகளை
எண்ணும் அளவிற்கு
ஒட்டிய வயிறுகள்
அச்சுறுத்தி நிற்கும் சட்டங்கள்
அர்த்தமற்ற போர்ச் சூழல்கள்
பேயாய் உழைத்தாலும்
கிடைப்பது பிச்சைச் சம்பளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு துளி உயர்வுக்கும்
உயிர்வருத்தி உண்ணாவிரதங்கள்
இதற்காகவா நாம் பிறந்தோம்?

சுரண்டிச் சுரண்டி எம்மைச்
சுக்கு நூறாக்கி விட்டீர்களே
பச்சைக் கம்பளம் விரித்தாற்போல்
பசுமை ஆக்கி வதைத்தோமே
உச்சிமலைகளைக் கூட
உல்லாச புரியாக்கி வைத்தோம்
மலையிடுக்குகளில் ஆங்கே
மலர் வனம் படைத்தோம்
சிலை வடிக்கவா போகிறீர்கள்
இல்லை எமக்கு தினம்
கொலை உறுத்தல்கள் அல்லவா
கொடுத் தழித்து வருகிறீர்கள்!

ஒற்றுமையே எங்கள் பலம்
உணர்வுகளை இனிமேல் நாம்
ஒருபோதும் விற்க மாட்டோம்
சரிபாதி எமக்கிங்கு
தரும் நாள் வரும் வரைக்கும்
உடல்சாய்வு எது வரினும்
ஒருபோதும் ஓயமாட்டோம்!

ஆலையூரான் க. தங்கராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந் நூலாசிரியர்...



கந்தையா தங்கராசா ஒரு பெருந்தகையாளர். கல்விமான், நல்லதொரு ஆசிரியர், சிறந்ததொரு அதிபர், கண்ணியமான கல்விப்பணிப்பாளர், ஆலங்கேணியில் பிறந்து வளர்ந்து, ஆலங்கேணிப் பாடசாலையிலேயே ஆரம்பக்கல்வியைக் கற்று வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் உயர் கல்வியைக் கற்றவர். மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை முடித்து மலையகப் பாடசாலைகளில் கல்வித்தொண்டாற்றியவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் B.A பட்டத்தைப் பெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வி டிப்ளோமாவை முடித்தவர் ஆசிரியராய் அதிபராய்க் கடமை புரிந்தவர். இலங்கை கல்வி நிர்வாக சேவையில் SLEASல் இணைந்து வலயக் கல்விப் பணிப்பாளராய் மூதூர், திருகோணமலை வவுனியா ஆகிய பிரதேசங்களில் கடமையாற்றியவர்.

ஊருக்காக உழைத்த பெருமகன். தமிழ்த்தொண்டாற்றிய தகைசான்றோன். அருமையான கவிஞன். சிறந்த பேச்சாளன். மூதூர் பிரதேசத்துக் கிராமங்களில் நடந்தேறிய கவிதை அரங்குகளில் கவிஞர் தாமரைத் தீவான் தலைமையில் அவர் பாடிய கவிதைகள் ஏராளம். சிறந்த எழுத்தாளர், கவிதை, சிறுகதை, நாடகம், கட்டுரை என தமிழ் இலக்கியத்துறையில் தடங்கள் பதித்தவர். பிறந்தது முதல் எனது இணைபிரியாத நண்பனாகத் திகழ்ந்தவர். அவர் இன்று நம் மத்தியில் இல்லை. இலக்கிய உலகும், கல்வியுலகும் நல்லதொரு ஆர்வலரை இன்று இழந்து விட்டது. அவர் உயிருடன் இருக்கும் போது ஒரு நூலையாவது நூலுருவில் பார்த்துவிடத் துடித்தார். அது நிறைவேறாது போய்விட்டது.

கந்தையா தங்கராசா 'பொங்கினாள் மீனாச்சி' நூலினை நூலாக்கம் செய்வதில் ஈடுபட்டிருந்தார். தட்டச்சு செய்தவண்ணம் இருந்தது. அரச நூலக ஆவணவாகற் சேவைகள் சபையினர், அவரது "சங்கீதன்" என்ற சிறுவருக்கான நெடுங்கதையை தேர்ந்தெடுத்திருந்தது. அதன் முடிவு வருவதற்கு முன் தனது நெடும் பயணத்தைத் தொடர்ந்து விட்டார். சங்கீதனை ஒருவாறு வெளிக்கொணர்ந்தேன். இப்போது பொங்கினாள் மீனாச்சியை தூசு தட்டி உங்கள் முன் தருகிறேன். நாம் எல்லோரும் அவரது ஆக்கங்களை வெளிக் கொண்டு வந்து மக்கள் கைகளில் தவழவிடுவது தான் நாம் அவருக்கு ஆற்றும் நன்றிக்கடனாகும். உங்களது ஒத்துழைப்புக்களை நாடி நிற்கிறேன் இந்நூலாக்கத்தில் ஈடுபட்டு உழைத்த அனைவருக்கும் எனது நன்றியினைக் கூறிக்கொள்கிறேன்.

கேணிப்பித்தன் ச. அருளானந்தம்.

ISBN : 955 -9952-1-7

Jeya Offset Printers
T.P: 0777-271 478

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org